Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-–12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-06 | 22-09-2004 | புதன்கிழமை | ஓசை -217

க
ணே
சா
ந
கை
யு
க
ங்

தங்கநகை
உலகில்
தமக்கென
தனியிடம்
பதித்தவர்கள்



இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10148)

## சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடுவோரோடு இணைந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்!

### விடுதலைப்புலிகள் சமாதானச் செயலகம் அறிவிப்பு

சமாதானத்தை வேண்டிநிற்கும் தமிழ் மக்களின் சார்பாக, சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடும் ஐ.நா வுடனும் அனைத்துலக மக்களுடனும் இணைந்து கொள்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் பெருமை கொள்கின்றனர்.

இவ்வாறு சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;.

அரைநூற்றாண்டு காலமாக, அடக்குமுறை, பாகுபாடு, அநீதி என்பவற்றிற்கும் இரண்டு தசாப்தங்களாக, ஓர் கொடிய யுத்தத்திற்கும் மத்தியில் போராடி வருபவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் அரசியல் குழு ஐரோப்பா செல்லமுன் மட்டு. செல்லும்

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான விடுதலைப்புலிகளின் அரசியல்குழு ஐரோப்பிய விஜயத்திற்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் செல்லவுள்ளது. இக்குழு நாளை மறுதினம் அங்கு சென்று பலதரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

பின்னர் இக்குழு 28ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டு சுவிட்சர்லாந்து பயணமாகி அங்கு முதலாம், இரண்டாம் திகதிகளில் அங்குள்ள தமிழ் அரசியலமைப்புச் சட்ட நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தும். பின்னர் மூன்றாம் நான்காம் திகதிகளில் ஐரோப்பிய மனித உரிமைகள் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்தும். பின்னர் மேலும் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் இக்குழு செல்லவுள்ளது. அத்துடன் இவ்விஜயத்தின் போது நோர்வே சென்று அங்கு அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளது. இதேவேளை ஜெனிவா

(12ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலுள்ள புலிகளின் முகாம்கள் குறித்த விரிவான தகவல்களைப் பெற்றுத்தருக!

### கண்காணிப்புக் குழுவிடம் மீண்டும் அரசு கோரிக்கை

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் அமைத்துள்ள முகாம்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை விரிவாகப் பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மீண்டும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

விடுதலைப்புலிகள் திருகோணமலை துறைமுகத்துக்குத் தென்புறமாக முகாம் மற்றும் சிறிய பதுங்கு குழிகளை அமைத்துள்ளதாக கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இதனைக் கோரியுள்ளார். இருப்பினும் இந்த விடயம் தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்றை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பாதுகாப்பு செயலாளருக்கு வழங்கியுள்ளது. இதனுடன் தொடர்புடைய முழுமையான அறிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கவுள்ளது.

## மட்டு. வவுணதீவில் இன்று படையினர் – புலிகள் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் சந்திப்பு இன்று நடைபெறவுள்ளதாக மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் போராளிகள் மீதான திட்டமிட்ட தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து. இத்தகைய சந்திப்புகளிலிருந்து கடந்த யூன் மாதம் முதல் விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டார்கள். கடந்த மாத இறுதியில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் றொன் புறூவ் ஹொவ்டே மட்டக்களப்பு சென்று விடுதலைப் புலிகளுடனும், இராணுவத்தினருடனும் தனித் தனியாக மேற்கொண்ட பேச்சு

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகளின் நிலைகளை ஒரு போதும் பின்நோக்கி நகர்த்தோம்

### திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன்



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் படை நிலைகள் எவையும் ஒருபோதும் பின்நோக்கி நகர்த்தப்படமாட்டாது என திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

கந்தளாயில் நேற்று முன்தினம் திங்கள் மாலை நடைபெற்ற தியாகி திலீபன் நினைவு தின நிகழ்வில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கடற்புலிகளின் கேந்திர முக்கிய நிலைகளையும், விடுதலைப்புலிகளின் தரைப் படையின் முகாம்களையும் தூர வீச்சு ஆயுதப்பிரிவின் நிலைகளை யும் பின்நோக்கி நகர்த்தும் முடிவை நாம் ஒருபோதும் எடுக்கமாட்டோம்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம்களை அகற்றும்படி கோருவதற்கு இலங்கை அரச படையினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும் எழிலன் தெரிவித்தார்.

எழிலன் மேலும் கூறியதாவது; திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்பு அமைக்கப்பட்டவை. அவை புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணானவை அல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் மாணவர் படுகொலை 9ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் உடல் சிதறிப் பலியான பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் 9ஆம் ஆண்டு நினைவாக இன்று புலோலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மண்டபத்தில் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபரின் தலைமையில் இன்று நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

பாடசாலை கல்விச்சமூகத்தினர் மேற்படி நிகழ்வினை ஒழுங்கமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் இவ்வார இறுதியில் வெளிவரும்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வார இறுதியில் வெளியிடப்படும். இப்பெறுபேறுகளை WWW.Doenets.lk இணைய முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும், ஆகஸ்ட் மாதம் நடந்த இப் புலமைப் பரீட்சையில் மூன்று இலட்சம் சிறுவர், சிறுமியர்கள் தோற்றியுள்ளார்கள்

www. doenets.lk

## கனடா பொங்கு தமிழ் நிகழ்வுகள் குறித்த நேரத்திற்கு முன்பே ஆரம்பம்

கனடா ரொறன்ரோவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 2 மணியளவில் ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொங்குதமிழ் நிகழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கே ஆரம்பமாகும் பொங்குதமிழ் விளம்பரங்களில் குறிக்கப்பட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சி நிரலினை முழுமையாக உள்வாங்குவதற்காக நிகழ்ச்சிகள் சரியாகப் பிற்பகல் 2 மணிக்கே ஆரம்பமாகும் எனத் தெரியவருகிறது. எனவே பொங்குதமிழில் கலந்து கொள்ளும் மக்களை பிற்பகல் 2 மணிக்கு குயின்ஸ் பார்க் முன்றலிற்கு வருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (32)

**என் போராட்ட வரலாற்றுச் சாதனையையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும், பூரண திருப்தியும் அடைகிறேன்.**




**தியாகி லெப்.கேணல் திலீபன்**

## வரிவிளம்பரம்

### விண்ணப்பப்படிவம் விற்பனைக்குண்டு

இலங்கை வங்கியின் ஆளணி உதவியாளர் பதவிக்கு ஆட் சேர்ப்பதற்கான விண்ணப்பப்படி வம் விற்பனைக்கு உண்டு. ICS கணினிப்பயிற்சி நிலையம் ஏ9றோட்-கிளிநொச்சி. (இலங்கை வங்கி அருகாமையில்). (5118)

## கண்டெடுப்பு

முகமாலையில் இருந்து வன்னி மேற்குப் பிரதேசம் ஒன்றிற் குச் செல்லும் பேருந்தில் 18.08.2004 அன்று பயணப் பொதி யொன்று கைவிடப்பட்ட நிலை யில் அக்கராயன் காவல் பணி மனையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.இதற்கு உரியவர்கள் அக்க ராயன் காவல் பணிமனையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள் ளவும். (15)

# பரந்தன் சந்தியில் இன்று பேருந்து தரிப்பிடம் திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் புதிதாக அமைக்கப்பெற்ற பேருந்து தரிப்பிடம் இன்று காலை 6.00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி பேருந்து தரிப்பிடத் தினை ஆர்.வி.பந்தல் சேவையினர் அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## அவசரகூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லை துணுக்காய் கல்வி வல யங்களைச் சேர்ந்த அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் களுக்கான அவசர கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண் கலைக்கல்லூரியில் நடைபெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. இதில் அண்மையில் மேற் கொள்ளப்படவுள்ள போராட்டம் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் விபரம் திரட்டல் இடம் பெற வுள்ளதாகவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

### தொடர்பு கொள்ளவும்

மரியா வீதி வட்டுக்கிழக் கைச் சேர்ந்தசிவசுப்பிரமணியம் ஜேசுதாசன் (சுபாஸ்) எங் கிருந் தாலும் உடனடியாக மு/மாங்குள மகாவித்தியாலய ஆசிரியர் கேசவன் அவர் களுடன்தொடர்பு கொள்ளவும்.

தே.அ.அ.இல.690411407V

கேசவன் மாஸ்ரர்,
மு. மாங்குளம் மா.வி.
மாங்குளம்.
(5117)

# நலன்புரி நிலையங்களிலுள்ள சிறார்களின் உணர்வை வெளிப்படுத்தும் ஓவியப் போட்டி

## இலங்கை ம.உ ஆணைக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)


உயர் பாதுகாப்பு வலயங் காரணமாக இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசித்து வரும் சிறார்களது உள்ளக்கிடக்கையினை வெளிப் படுத்தும் வகையிலான ஓவியப்போட்டியொன்றினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடாத்தி வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அகதிச்சிறுவர்களிடையே இவ் ஓவியப் போட்டி நடாத்தப்பட்டு வருகின் றது.

தெரிவு செய்யப்படுகின்ற சிறார்களது ஓவியங்கள் கொழும்பில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த சிறார் கள் வசித்து வரும் வடமராட்சி கிழக்கில் மற்றும் வலிகாமம் வடக்கின் எஞ்சிய பகுதிகளில் விசேட மாக நடாத்தப்பட்ட இவ் ஓவியப் போட்டிகளில் முகாம்களில் வசித்து வரும் நூற்றுக்கணக்கான சிறார் கள் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்திற்கான இறுதிப் போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

அகதி முகாங்களில் வசித்து வரும் நூற்றுக்கணக்கான அகதிச்சிறார்களும், யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடிய மர்ந்துள்ள முஸ்லிம் சிறார்களும் கலந்து கொண்டு ஓவியங்களை வரைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(27)



படம்: தயாபரன்

## அறிவித்தல்

### கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி

கிளிநொச்சி திருநகர் பகுதியில் பழைய புகையிரத நிலையக் காணியில் பார ஊர்திகள் தவிர்ந்த ஏனைய சிற்றூர்திகள் நிறுத்துவதற்கான வாகனத்தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் 22.09.2004ஆம் திகதி முதல் மேற்படி இடத்தில் சகல சிற்றூர்திகளையும் நிறுத்தி விபத்துக்களிலிந்து பொதுமக்களைக் காப் பதற்கு ஒத்துழைக்குமாறும், இதற்கான பாதுகாப்புக் கட்டண மாக ஒரு வாகனத்திற்கு நாளொன்றிற்கு ரூபா 20.00 அற விடப்படும் என்பதையும் சகல வாகன உரிமை யாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(பொன். நித்தியானந்தம்)
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-10228)


மீண்டும் புதுப்பொலிவு பெற்று வரும் கிளிநொச்சி நகரில்

**தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்**

டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்

Diploma in MS Office

Diploma in Desktop Publishing

Diploma in Computer Studies




Diploma in Computer Programming

Diploma in Web Design

Diploma in Computer Programming

அறிமுக கட்டணச் சலுகை

2900/- மட்டுமே

(தவணை முறையிலும் செலுத்தலாம்)

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்களுகளும் பாடக்குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும்.

இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்

பாடநெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.


**கணினியியல் கல்லூரி - The Computer College**

(Affiliated to Asian Computers)
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-10404)


## வீரவணக்கம்

### 03 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் □ - □ - 1982



தாயக மண்ணில் 15 - 09 - 2001

**தமிழீழ தேசியத்துணைப்படைவீரர்**

# த. இராமர்

தங்கராசா இராமர்

நி.மு. இடதுகரை முத்து ஐயன்கட்டு

15.09.2001 அன்று விளக்குவைத்தகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்".
(5119)

## 43/5726 (இசுசு) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை

### 25. 09. 2004

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 43/5726 ஆம் இலக்க பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய் யப்படவுள்ளது. பாரவூர்தியை 14.09.2004 தொடக்கம் 24.09.2004 வரை கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்தில் அலு வலக நேரத்தில் பார்வையிடலாம். 25.09.2004 முற்பகல் 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

01. மீளளிப்பு முற்பணமாக உருபா. 1000/= செலுத்தியே கேள்வியில் பங்கு பற்றலாம்.

02. தெரிவு செய்யப்படுவோர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி பாரவூர்தியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பூநகரி பல நோக்குக் கூ.சங்கம்,
நாகதேவன்துறைவீதி,
வாடியடி, பூநகரி.

திரு.கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி பல நோ.கூ. சங்கம்.

(சி-10226)

# ஈராக் தொடர்பான கொள்கையை புஷ் நிர்வாகம் மாற்ற வேண்டும்

### அமெ.குடியரசு சனநாயகக் கட்சி பா.உறுப்பினர்கள் வலியுறுத்து

**ஈராக் தொடர்பான கொள்கையை புஷ் நிர்வாகம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கக் குடியரசு மற்றும் சனநாயகக் கட்சிகளின் பாராளுமன்ற (செனட் அவை) எம்பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஈராக் மீதான தாக்குதலையடுத்து உண்மை நிலவரம் என்ன என்பது தெரிந்துவிட்டது.**

ஆக்கிரமிப்புக் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது இதன் மூலம் தெரிகிறது. வியட்நாம் போரிலும் இதைப் பரிசீலனை செய்யாமல் போய்விட்டோம்; என்று வியட்நாம் போரில் பங்கேற்றவரான செனட் உறுப்பினர் சுக்கேகல் தெரிவித்தார். சி.பி.எஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்தார்.

கட்டமைப்பு வசதிகளைச் சீரமைக்க பாராளுமன்றம் 1800 கோடி டொலர் ஒதுக்கிய போதிலும் புஷ் நிர்வாகம் வெறும் 100 கோடி டொலரை மட்டும் செலவிட்டுள்ளது. இது புஷ் நிறுவாகத்தின் செயல் திறமின்மையை காட்டுகிறது என்றார் செனட் வெளியுறவுக் குழுத் தலைவர். றிச்சர்டு லூகர் ஈராக்கில் ஏற்பட்ட குழறுபடிக்கு படை வீரர்கள் எண்ணிக்கை போதுமான அளவிற்கு இல்லாததும் காரணமாக இருந்திருக்கலாம் என்றார் செனட் உறுப்பினர். ஜான் மெக்கைன் அரிஸோனா குடியரசுக் கட்சி செனட் உறுப்பினராக உள்ளார் மெக்கைன்.

ஈராக்கில் 1 இலட்சத்துக்கும் மேல் கிளர்ச்சியாளர்கள் உள்ளனர். இது தவிர அவர்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்து உதவுபவர்களும் ஏராளமாக உள்ளனர் என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. பாதுகாப்புத் துறை புலனாய்வு அமைப்புடன் தொடர்புடைய முன்னாள் வல்லுனர் ஜெப்ரிவைட் என்பவரை மேற்கோள் காட்டி தரைம்ஸ் பத்திரிகை செய்தி திரட்டியுள்ளது. அபுமவ்சாப் அல்ஜர்காவி என்ற அமைப்புடன் இந்தக் கிளர்ச்சியாளர்களுக்கு தொடர்பு உண்டு. அவர்கள் பாக்தாவில் அமெரிக்கத் தூதரகம் அமைந்துள்ள தெருவில் ரோந்து செல்கின்றனர் என்று அந்த செய்தி தெரிவிக்கின்றது. அமெரிக்கப்படைகள் மற்றும் ஈராக் இடைக்கால அரசிற்கு ஆதரவு தரும் ஈராக்கியர்களை கொல்லத் தயங்கவேண்டாம் என்று தமது ஆதரவாளர்களுக்கு அல்ஜர்காவி அமைப்பின் குழு அவ்வப்போது வலியுறுத்தி வருகின்றது என்றும் ரைம்ஸ் இதழின் செய்தி குறிப்பிடுகிறது.

## உச்ச நீதிமன்றம் கால அவகாசம்

நதி நீர் ஒப்பந்தங்களை பஞ்சாப் அரசு இரத்து செய்தது தொடர்பாக தனது நிலையைத் தெரிவிக்க ராஜஸ்தான் ஜம்மு காஷ்மீர், புதுடில்லி மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் நான்கு வார காலம் அவகாசம் அளித்துள்ளது.




அமெரிக்க சனாதிபதித் தேர்தல் களத்தில் ஜோர்ஜ் டபிள்யு புஷ்சிற்கு சவாலாக நிற்கும் சனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோன்கெரி பிரச்சாரக் கூட்டமொன்றின் போது.

## பொது மன்னிப்புக் கோருகிறார் சதாம்

### ஈராக் பிரதமர் அல்லாவி தெரிவிப்பு


தனக்குப் பொது மன்னிப்பு அளிக்கும்படி ஈராக் முன்னாள் அதிபர் சதாம்ஹுசைன் கோரிக்கை விடுத்துள்ளதாக பிரதமர் இயாத் அல்லாவி தெரிவித்தார்.

லண்டனில் அல்ஹையாத் என்ற அரேபிய மொழி நாளேட்டிற்கு அவர் அளித்த பேட்டி வருமாறு; சிறையில் காலம் தள்ளி வரும் சதாம் தற்போது மனம்நொந்து கிடக்கிறார். மனித குலத்திற்கு எதிராக குற்றம் இழைத்ததாக அவர் மீது வழக்குள்ளது. அதற்கான விசாரணை எப்போது தொடங்குமோ என்ற குழப்பத்தில் அவர் இருக்கிறார். பொது மன்னிப்புக் கேட்டு அவர் தரப்பிலிருந்து எனக்கு தகவல் வந்துள்ளது. மக்கள் நலனை அடிப்படையாகக் வைத்தே எங்களின் செயற்பாடு உள்ளது.யாரையும் கொடுமைப் படுத்துவது எங்கள் நோக்கம் இல்லை. அவரது கோரிக்கை பற்றி முடிவு செய்ய வேண்டியது நீதி மன்றம்தான்.

## சிறையில் எளிய வாழ்க்கை வாழும் ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்

ஈராக்கின் அதிபராகத் திகழ்ந்து தற்போது பதவியிழந்து சிறைவாசம் அனுபவித்து வரும் சதாம் ஹுசைன் எளிமை வாழ்க்கையை நடத்தி வருகிறார். ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு அருகே முன்பு அவருக்குச் சொந்தமாக இருந்த அரண்மனையிலுள்ள ஒரு அறையில் சிறைவாசம் அனுபவித்து வருகிறார். செடி வளர்ப்பது, குரான் படிப்பது, வேறு நூல்களைப் படிப்பது எனப் பொழுதைப் போக்குகிறார். காலை உணவாக அமெரிக்க வீரர்கள் எடுத்துக்கொள்ளும் உணவே சதாமுக்கும் தரப்படுகிறது. தனது அறைக்கு வெளியே மைதானத்தில் தினசரி 3 மணிநேரம் உடற்பயிற்சி செய்ய அவருக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.அவரைச் சந்தித்த ஈராக் அதிகாரிகளும், அமெரிக்க அதிகாரிகளும் இந்தத் தகவலை தெரிவித்ததாக 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

பாக்தாத்திலுள்ள மருத்துவமனைக்கும் அவர் அவ்வப்போது மருத்துவ பரிசோதனைக்கு உலங்கு வானூர்தியில் அழைத்துச் செல்லப் படுகிறார். பிராஸ்டேட் சுரப்பி வீங்கி உள்ளதாம். புற்றுநோய்க்கான அடையாளம் இது என்று மருத்துவர்கள் தெரிவிப்பதாக செய்தி மேலும் தெரிவிக்கிறது. படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிராக அவர் மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்கில் ஆதாரம் திரட்ட அவரிடம் மணிக்கணக்கில் விசாரணை நடத்தியுள்ளனர்.



இந்தியா நேற்று முன் தினம் அனுப்பிய ஓராக்கெட் வெற்றிகரமாக வானத்தில் ஏவப்படுகிறது. உயர் கல்வியை இலகுபடுத்தும் திட்டத்திற்கமைய இந்தச் செய்மதி ஓராக்கெட் மூலம் ஏவப்படுகிறது.

## நாற்பத்திநாலு இந்திய மீனவர்கள் கைது

### 7 படகுகள் பாக்.படையினரால் பறிமுதல்

பாகிஸ்தான் கடல் பகுதியில் சட்ட விரேதமாக மீன்பிடித்ததாக 44 இந்திய மீனவர்களைக் கைது செய்து அவர்கள் சென்ற 7படகுகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கடல் எல்லையை மீறுவோரைக் கைது செய்வது எங்கள் கடமை. இருப்பினும் இரு நாட்டு அதிகாரிகளின் பேச்சுவார்த்தை மூலம் அவர்கள் விடுவிக்கப்படுவதும் சாத்தியமானதே என்று பாகிஸ்தான் கடலோர காவல்படையின் உயர் அதிகாரி கராச்சியில் தெரிவித்தார்.

## தூத்துக்குடி நகராட்சிப் பள்ளியில் தீ விபத்தில் ரூ.75000 சேதம்

தூத்துக்குடியிலுள்ள நகராட்சிப் பள்ளி ஒன்றில்' நேற்று அதிகாலை 5.30 மணியளவில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. இதில் பள்ளியில் உள்ள மேசைகள் மற்றும் கணினி ஆகியவை தீக்கிரையாகின. அதிகாலை நேரம் என்பதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. முதற்கட்ட விசாரணையில் மின்கசிவு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தோனேசிய சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி சுகர்னோ புத்திரி வாக்குச்சாவடி ஒன்றில் வாக்களிக்கின்றார்.

## பல துறைகளில் ஒருங்கிணைந்து செயற்பட இந்தியாவும், பிரிட்டனும் கூட்டுப்பிரகடனம்



(லண்டன்)

பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத் துறையில் ஒத்து ழைப்பை அதிகரித்தல், தீவிரவாதத்தை ஒடுக்குதல் உட்பட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயற்பட இந்தியாவும் பிரிட்டனும் கூட்டுப் பிரகடனத்தில் திங்கட்கிழமை கையெழுத்திட்டன.

அத்துடன் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரிட்டன் தீவிர ஆதரவு அளித்துள்ளது. நியூயோர்க் செல்லும் வழியில் லண்டன் சென்ற பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன் தினம் பிரிட்டன் பிரதமர் டொனி பிளேயரை டவுனிங் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.அதன் இறுதியில் கூட்டுப்பிரகடனத்தில் இருவரும் கையெழுத்திட்டனர். இரு நாடுகளின் நட்புறவில் இது இன்னொரு முக்கிய வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

தீவிரவாதம், வறுமை ஒழிப்பு, எயிட்ஸ் கட்டுப்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சர்வதேச குற்றங்களைத் தடுத்தல், போதைப் பொருள கடத்தல் தடுப்பு உட்பட பல்வேறு துறைகளில் தொடர்ந்து ஒத்துழைப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சவால்களை எதிர் கொள்ளப் பல முனை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்குப் பிரிட்டன் தொடர்ந்து தீவிர ஆதரவு அளிக்கும். வெளியுறவு மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இருநாட்டுத் தலைவர்களும் வெளியுறவு அமைச்சர்களும் ஆண்டுதோறும் சந்தித்துப் பேசுவார்கள். கூட்டு இராணுவப்பயிற்சி அணுசக்தித்துறையில் இரு நாடுகளும் இணைந்து செயற்படும். பேரழிவு ஆயுதங்களை ஒழிக்கும் முயற்சியில் மேலும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். தீவிர வாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டல் மற்றும் பரிமாற்றத்தை ஒடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# தமிழ்மொழியின் தனித்துவம் பேணப்படுவதை எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணலாம்

## –தமிழ்மொழித் தினவிழாவில் திருமலை அரசியல்துறைப்பொறுப்பாளர்

(திருமலை)

**"விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் தமிழ்மொழியின் தனித்துவம் பேணப்படுகின்றது. விளம்பரப் பலகையிலிருந்து அனைத்துச் செயற்பாடுகளிலும் செந்தமிழ் பேசுகின்றதை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் காணலாம்". இவ்வாறு திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

ஞாயிறு மாலை திருமலை சென்ஜோன்ஸ் பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழாவில் சிறப்புரை நிகழ்த்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

ஆரம்பத்தில் பிரதம அதிதியான மாகாணகல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் மற்றும் அதிதிகள் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவரின் இசையுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மாகாணக்கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் விழாவிற்கு தலைமை வகித்தார். "தமிழ்மொழி மெல்ல இனிச்சாகும் என்பதற்கு மாறாக சாம்பரிலிருந்து உயிர்த்தெழுந்த பீனிக்ஸ் பறவை போன்று தமிழ் மொழி காலங்காலமாக பல இடர்பாடுகளையெல்லாம் வெற்றிகொண்டு வந்துள்ளது, தமிழ்மொழி அழிந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் எமது போராளிகள் ஒவ்வொருவரும் தங்களை அர்ப்பணித்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்" என்றும் எழிலன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் தமிழ்மொழி அழியக்கூடாது, தமிழினம் அழியவிடக்கூடாது, தமிழ் மண் காப்பாற்றப்பட வேண்டும் என்ற இலக்குடன் தான நடத்தப்படுகிறது என்றும் எழிலன் தெரிவித்தார்.

பிரதம அதிதி மாகாணகல்வி அமைச்சுச் செயலாளர் இ.தியாகலிங்கம் பேசும்போது "இனத்தின் அடையாளமாக விளங்குவது மொழியாகும். தமிழ் மொழியை அழித்துவிட்டால் அந்த இனத்தை அழித்து விடலாம் என்ற எண்ணத்தைத் தோற்கடிக்க வேண்டும். தமிழ் மொழியை வாழவைப்பதன் மூலம் தமிழினத்தை வாழவைக்கலாம். இலக்கண சுத்தியுடன் வழுக்களின்றி தமிழ்மொழியைப் பேசவேண்டும், எழுத வேண்டும் இந்த பணியில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஈடுபடவேண்டும்" என்று தெரிவித்தார்.

மாகாணக்கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கமும் இங்கு உரையாற்றினார். விழாவையொட்டி அச்சிடப்பட்ட கவின் தமிழ்மலரை பிரதம அதிதி தியாகலிங்கம் மாகாணக்கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கத்திடமிருந்து முதலாவது பிரதியைப் பெற்று வெளியிட்டு வைத்தார். பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாமலர் ஆசிரியரும் விழாக் குழுச் செயலாளருமான உதவிக்கல்விப் பணிப் பாளர் என்.அனந்தராஜ் நன்றி தெரிவித்தார். பிரதம அதிதியின் துணைவியார் திருமதி ஹேமந்தராணி தியாக லிங்கம் வெற்றியீட்டியவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (25)

### கண்டெடுப்பு

கோவிலடி, அம்பாள் நகர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஞானபண்டிதர் விவேகானந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (800304687V) கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் யாழ் சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது விளம்பரப்பணிமனையில் ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும். (15)

## கற்பூரப் புல்வெளி பகுதியில் 10,000 பனம் விதைகள் நடுகை

(முல்லை)

குமுழமுனை முறிப்பு வீதியில் அமைந்துள்ள கற்பூர புல்வெளியில் தியாகி லெப். கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பனம் விதை நடுகை எதிர்வரும் 24ஆம் திகதி மேற்கொள்ளப் படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார். சுமார் 10 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்படவுள்ளதாக குமுழமுனை கமக்கார அமைப்பு கலந்துரையாடலின் போது அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கு பனம் பண்ணைத் திட்டம் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## திலீபன் நினைவு நாளை முன்னிட்டு பிரதேச ரீதியான சிரமதானப் பணி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் அரசியல் துறையின் ஒழுங்கு படுத்தலில் பிரதேச ரீதியான சிரமதானப்பணி நடைபெற்று வருகின்றது. வட்டக்கச்சி மாவீரர் மண்டபமும், பாடசாலைகள் ஆலயங்கள், மயானங்கள் என்பனவும் வீதிகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பொது மண்டபங்கள் சனசமூக நிலையங்கள் என்பன அரசியல் துறையும், கிராமசேவகரும் இணைந்து ஒழுங்குசெய்து பிரதேச ரீதியான சிராமதானப் பணி நடைபெற்று வருகின்றது. மற்றும் திலீபனின் 11ஆம், 12ஆம் நாள் நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அதற்கு மக்கள் அனைவரும், தகுந்த பங்களிப்பு செய்ய வேண்டும் என அரசியல் துறையினர் வேண்டிக்கொள்கின்றனர். (12)



கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் கடும் வரட்சியால் வாழை மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கையாளரும், மிகுந்த பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். வரட்சியால் அழிவடைந்துள்ள தென்னங் கன்றையும், வாழைகளையும் படங்களில் காண்க. (படம்-சோதி)

## தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் நினைவாக மாணவர் பொதுஅறிவு வினாவிடைப் போட்டி

(கிளிநொச்சி)

தியாகி லெப். கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கரைச்சிக் கோட்ட பாடசாலைகளில்பொது அறிவு வினாவிடைப் போட்டியொன்று நடாத்தப்படவுள்ளது.

அரசியல்துறையினரின் அனுசரணையில் அக்கராயன் பிரதேசத்தில் இயங்கிவரும் ஆற்றல் கலை, சமூக செயன்முனைப்புக் குழுமத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிக்கோட்டத்தில் 20 பாடசாலைகளின் 10,11 ஆம் தர மாண[illegible]கள் கீழ்ப்பிரிவின் கீழும், 12,13 ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவின் கீழும் இப்பொதுஅறிவு வினாவிடைப்போட்டி 24.09.2004 (வெள்ளிக்கிழமை) அன்று நடாத்தப்பட்டு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் மூவரும், கோட்ட மட்ட ரீதியில் மூவரும் தெரிவு செய்யப்பட்டு ஸ்கந்தபுரம் முருகன் ஆலய முன்றலில் 26.09.2004 அன்று தியா[illegible] திலீபனின் 17 ஆம் ஆண்டு இறுத[illegible]நாள் நிகழ்வில் வைத்து பிரிசில் வழங்கிக் கௌரவிக்கப் படவுள் ளதாக ஆற்றல்,கலை, சமூக செயன் முனைப்புக் குழுமத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் ஜெயகாந்தன் தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம் பகுதியில் இயங்கி வரும் ஆற்றல், கலை,சமூக செயன முனைப்புக் குழுமம் கலைத்துறை ரீதியான கற்கைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## வவுனிக்குளத்தின் கீழான 2004-2005 காலபோக நெற் செய்கை குழுக்கூட்டம்

(மல்லாவி)

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வவுனிக்குளத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட குளங்களுக்கான 2004ஆம், 2005ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கைக்கான குழு கூட்டம் பாலிநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை 1030 மணிக்கு முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் நெற்செய்கைக்கான கால அட்டவணை மூலம் நீர் விநியோகம் சீர் படுத்தல் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாணல், அபிவிருத்திகளை மேற்கொள்ளல் சமகால அரசியல் சம்பந்தமான கருத்துக்களை முல்லை மாவட்ட நீர்ப்பாசன பிரதித்திட்ட பணிப்பாளர். சு.சிவகுமார், முல்லைமாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர், துணுக்காய் பிரதேச செயலர், வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் தவக்குமார், முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர். சு.சின்னண்ணன் பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர்கள் கருத்துரை வழங்கினர். நிகழ்வில் கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள், பொதுமக்கள், போராளிகள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர் . (24)

### விபத்தில் ஈருருளி சேதம்

கிளிநொச்சி A-9 சாலையில் பழைய சந்தைப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணியளவில் உந்துருளி ஒன்றும், ஈருருளி ஒன்றும் விபத்துக்குள்ளானதில் ஈருருளி பலத்த சேதமடைந்தது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை காவல்துறை நகரவீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டனர். (15)

## வவுனியாவில் கடந்த மூன்று மாதங்களில் 56 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடு!

### -மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு தகவல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 56 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த 3மாத காலத்திலேயே இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப் படுகின்றது.

இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகத்திற்கான முயற்சி என்பன தொடர்பாக அமைந்துள்ளன என்று சிறுவா பாதுகாப்புக்குழுவின் வவுனியா மாவட்ட செயலக அறிக்கை தெரிவிக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களிலேயே முறைகேடான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும், மீளக்குடியேற்ற கிராமங்களிலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைகேடுகளால் 17 வயதிற்கும் 20வயதிற்குட்பட்ட இளைஞர்கள், யுவதிகளே பெரிதும பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு தெரிவித்துள்ளது.

## கட்டாக்காலி நாய்கள் பெருமளவில் அதிகரிப்பு

(வடமராட்சி)

மருதங்கேணி சந்தி தொடக்கம் ஆழியவளை வரை நூற்றுக் கணக்கான கட்டாக்காலி நாய்கள் வீதியில் செல்வோரை துரத்தியும், கடித்தும் வருகின்றன.

வீதிகளில் கூட்டம் கூட்டமாய் நிற்கும் நாய்கள் துவிச்சக்கர வண்டி, உந்துருளிகளில் பயணிப் போரையும் மற்றும் வாகனங்களையும் கலைத்து வருகின்றது. சிலவேளைகளில் வீதி விபத்துக்களும் ஏற்படுவதற்கு இது ஏதுவாக அமைகின்றது. நீண்ட காலமாக வடமராட்சி கிழக்கில் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படாமல் உள்ளதால், தற்போது பெருமளவில் பெருகியுள்ளது. எனவே உடனடியாக இது சம்பந்தமாக நடவடிக்கையினை எடுத்து நாய்களின் அச்சுறுத்தலில் இருந்து மக்களைக் காப்பாற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டிநிற்கின்றனர். (11)

### வருடாந்த திருவிழா

புதுக்குடியிருப்பு ஸ்ரீஉல களந்த பிள்ளையார் கோவில் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இத்திருவிழாவானது தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறும். விசேடமாக மாம்பழத் திரு[illegible]ழா, வேட்டைத்திருவிழா, சப்பரத் திருவிழா, தேர் உற்சவம், தீர்த்த உற்சவம் என்பன சிறப்பாக இடம் பெறுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுவருகிறது. (08)

### வீதியைப் புனரமைக்க வேண்டுகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஜெயந்திநகர் பிரதானவீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது கற்கள் வெளியரும்பிய நிலையில் சில இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதி பலவருடங்களுக்கு முன்பு தாரினால் செப்பனிடப்பட்டிருந்தது. ஏறத்தாழ 3கிலோமீற்றர் நீளமுடைய இவ்வீதி பல கிராமங்களை இணைக்கின்ற வகையில் அமைந்திருப்பதினால் உடனடியாக இவ்வீதியினைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றனர். (15)

# மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரன்



உன்னத குறிக்கோளின்
உயரிய தியாகத்தில்
உயிர்ஆகுதியாகிப் போன
உத்தம மாவீரன் தியாகம் தனை
எழுதிட தமிழினில் வார்த்தைகளில்லை!
மண்ணின் விடிவிற்காய்– இந்த
மக்களின் வாழ்விற்காய்
மரணத்தையே மகிழ்வோடு ஏற்ற
மாவீரன் திலீபன்.!

ஆள வந்த இந்தியரின்
அகிம்சை வேரையே
ஆட்டிவைத்த அற்புத
மறத்தமிழன் திலீபன்!

ஊனை உருக்கி
உயிர் தனைத் திரியாக்கி
தமிழ்மக்கள் உணர்வை நெய்யாக்கி
தன்னையே அதில் ஆகுதியாக்கியவன்.

தாயகமே துடிக்க தமிழினமே
இங்கே இரத்தக் கண்ணீர்வடிக்க
பன்னிரு நாட்கள்
பார்த்தீபன் தொடுத்தபோர்கண்டு

காற்றும் ஓர் கணம் வீசமறந்தது!
உலகமும் ஓர்நொடி தடுமாறிநின்றது.!
வானமும் மௌனமாய் அழுது தீர்த்தது–அதனால்
எம் தமிழீழமே பூகம்பமாய் வெடித்துச் சிதறியது.!

மக்கள் புரட்சி வெடித்தது– எம்
திலீபன் கனவு நனவாகியது
கோட்டையில் புலிக்கொடி பறந்தது
அவன் வழி நடந்தது தமிழினமே.

பதினேழாண்டின் முன்
பார்த்தீபன் தொடுத்த போரின் வெற்றி
நிச்சயம் எம் தலைவன் காலத்தில்
ஈடேறும் இது உறுதி.!

பா.வசந்தகுமாரி

## தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அகதிமுகாம்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிப்போயுள்ள கிராமங்கள் என்பவற்றில் வாழும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறார்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச்செய்யப்பட்டு வருகின்றன.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் தமிழ் மாணவர் ஒன்றியம் என்பவற்றின் ஏற்பாட்டில் இவ்வாறான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறார்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவே இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்.குடாநாட்டில் தியாகி திலீபனின் 17ஆவது நினைவு நிகழ்வை மக்கள் எழுச்சியுடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்களில் தியாகி திலீபனின் திருவுருவப் படங்களை வைத்துப் பந்தல்கள் அமைத்து நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

யாழ்.நகரப்பகுதியில் தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி இறுதி மூன்று நாட்களும் எடுத்துச் செல்லப்படவுள்ளது. இவை தேசிய எழுச்சிப் பேரவையினரால் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்களிலும் வீதிகளிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதுடன் சிற்றூர்திகளிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதுடன், தியாகி திலீபனின் படங்களும் வைக்கப் பட்டுள்ளன.

அரச நிறுவனங்களில் தேசியக கொடி ஏற்றக்கூடாது என இராணுவத்தினர் அறிவித்த போதும் உயர்கல்வி நிறுவனங்களான யாழ்பல்கலைக் கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியற் கல்லூரி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை போன்றவற்றில தேசியக்கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் சிறப்புடன் இடம் பெற்று வருகின்றன. (36,33,41)

## குன்றும் குழியுமாக தெளிவாவடி வீதி

யாழ். பெரியவிளானில் உள்ள "தெளிவாவடி வீதி" கடந்த 15 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. குண்டு,குழி நிறைந்ததாகக் காணப்படும் இவ் வீதியூடாக போக்குவரத்துச் செய்வோர் பலத்த அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். வீதியின் நிலை குறித்து பலரிடம் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## சங்கானை மக்களின் நன்மை கருதி இலவச மருத்துவ முகாம்

மானிப்பாய் பிரதேச லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சங்கானைப்பகுதி மக்களின் நன்மை கருதி இலவச கண்பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வைத்திய நிபுணர்கள் கண் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

வறுமைப்பட்டவர்களின் நன்மைக்காக நடத்தப்படும் இவ் இலவச மருத்துவ முகாமில் சம்பந்தப்பட்டோர் பங்கு கொண்டு பலன் பெறலாம என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

-தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத்தில்-

## 25 வருடம் சேவையாற்றிய ஊழியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத்தில் 25 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய ஊழியர்கள் சங்க நிர்வாகத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப் பட்டனர்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் பு.சிவமகாராசா தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கூட்டுறவாளர்கள் 36பேரும் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கூட்டுறவு ஊழியர்கள் 14பேர் தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக் கப்பட்டனர்.

இந்நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சி.பத்மநாதன். வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் இளங்கோவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (41)

## பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட பெண்ணை அழைத்துவந்தோர் மீது நடவடிக்கை

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் நோக்கில் ஏழாலைப் பகுதியில் இருந்து யுவதி ஒருத்தியை அழைத்து வந்து வடமராட்சியின் வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் மறைத்து வைத்திருந்த இருவர் கலாசாரம் பேணும் இளைஞர் குழுவிடம் சிக்கியுள்ளனர்.

குறித்த யுவதியைத் தமது உறவினர் எனக்கூறி வீடொன்றில் இவர்கள் தங்கவைத்திருந்ததாகவும் எனினும் அயலவர்கள் சிலர் சந்தேகம் கொண்டு கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மடக்கிப்பிடிக்கப்பட்ட இவர்கள் மூவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (27)

## யாழ்.இல் 7வீதிகளைப் புனரமைக்க "நிகொட்" 28 இலட்சம் வழங்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட முக்கியமான 7 வீதிகளைப் புனரமைப்புச் செய்யவென "நிகொட் 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

நிகொட் அமைப்பின் வீதி மற்றும் நகர வீதித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள இந் நிதியில் இருந்து நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட 7 வீதிகள்புனரமைப்புச் செய்யப்படும்.

மேற்படி 7 வீதிகளையும் புனரமைப்புச் செய்வதற்கான நிதியை யாழ்.மாநகரசபையிடம் நிகொட் அமைப்பு உத்தியோக பூர்வமாகக் கையளித்துள்ளது. (33)



யாழ்.கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய பவளவிழாவினை முன்னிட்டு நேற்றுக்காலை பவளவிழா நடைபவனி நடைபெற்றது. நடைபவனியின் ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்ட யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்,கல்லூரி அதிபர் மற்றும் ஏனைய விருந்தினர்களையும், நடைபவனியின் ஆரம்பத்தில் பங்குபற்றிய பாடசாலை பாண்ட்வாத்திய அணியினரையும், நடைபவனியில் பாடசாலை கவின்கலை மன்றம் நிகழ்த்திய சீலடிசிலம்படி மற்றும் காவடி நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படம்.செல்வா)

–தமிழ்த்தினப் போட்டிக்குச் சென்ற

## மாணவர்களின் வாகனம் மீது படையினர் கல்எறிந்து தாக்குதல்

(மட்டக்களப்பு)

திருகோணமலையிலிருந்து தம்பிலுவில் நோக்கிச்சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவர்களின் வாகனத்தைச் செங்கலடியில் வைத்துப் படையினர் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனா. திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்த தினப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய மாணவர்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிறிலங்காப்படையினரின் சீருடையில் இருந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் வாகன நடத்துனர் காயம் அடைந்துள்ளார்.

## சிறுமியைக் கடத்த முற்பட்ட 9பேர் தமிழீழ காவல்துறையால் கைது

கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்ட தினத்தன்று சிறுமி ஒருத்தியைக் கடத்த முயன்ற ஒன்பது பேர் தமிழீழக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி அதிகாலை ஆலயத்துக்கு வந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த முனைக்காட்டைச் சேர்ந்த மேற்படி 15 வயதுடைய சிறுமியை வழிமறித்த ஒரு குழுவினர் கடத்த முயற்சித்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து தமிழீழக் காவல்துறையினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையையடுத்து ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தமிழீழ நீதிமன்றில் நிறுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

பாகம்-13

என் அன்பு வாசகர்களே...? கிரேக்க நாட்டில் ஒரு தீவாகிய PARAS தீவில் நிற்கிறேன். அந்த அழகிய கடலில் கீழ் எத்தனை நாகரிகங்கள் புதைந்து கிடக்கின்றன.

என்னுடன் வந்த அந்தக் கிழவன் குடிப்பதிலேயே அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். எனக்கு மட்டும் அதிகம் குடிக்காதே என்று புத்திமதி செல்லி விட்டுஅவன் மண்டிக்கொண்டிருந்தான். நான் சும்மா சுவைத்துப் பார்த்தேன். எனக்குக் குடிப்பதில் நாட்டமே இருக்கவில்லை. கிரேக்க நாகரிகத்தை அறிவதில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தேன்.

ozo என்று ஒரு வகை மது பானம் தான் கிரேக்கர்களினால் பரவலாக அருந்தப்படுகிறது. அதற்கு நிறம் இல்லை. தண்ணீர் போலத்தான் அதுஇருக்கும். அதைத் தண்ணீருடன் கலந்து அருந்துவார்கள் ' 3/4 கிளாஸ் ' தண்ணீருக்குள் ' ozo1/4 கிளாஸை' விடுவார்கள் அது உடனே பால் போன்று வெள்ளைவெளேர் என்று மாறும். நெத்தலி போன்ற சிறிய அளவு மீனை அவித்து மிளகாய் உப்பு போன்றவற்றைப் பிரட்டி ஒரு 'டிஷ்' இல் வைத்திருப்பார்கள் ஒரு மிடர் ozo ,ஒருசிறிய மீன் இப்படியே 2,3,4, கிளாஸ்கள் அருந்துவார்கள்,

நான் எனது கிழவனை விட்டு விடத் தீர்மானித்தேன் அவனிடம் தயவாக...

"நான் உன்னை விட்டுப் பிரியப் போகிறேன் நீ குடிப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகிறாய் கிரேக்க நாகரிகம் பார்க்கவந்து உன்னைப் பராமரிக்க என்னால் முடியாது'' என்று கூறினேன். என்னை முதன்முதலில் BAR இல் சந்தித்த பொழுது எப்படிக் கை கொட்டிச் சிரித்தானோ அப்படியே அதேசிரிப்பைச் சிரித்தான் எனக்கு எல்லாமே புதிராய்த் தோன்றியது. எனது BAG ஐ எடுத்துத் தோளில் மாட்டினேன்.

"good bye" என்றேன்.

அவனை விட்டு வெளியேறினேன். அவனுக்கு எந்தச் சலனமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

* * * * * *

கிழவனைப் பிரிந்து விட்டேன் ஒரு துணையில்லை என்ற கவலை தான் என்றாலும்... என் பயணத்தைத் தொடர்ந்தேன். ஒரு சிறிய 'car' ஐ 10 நாட்களுக்கு வாடகைக்கு எடுத்தேன். அங்கே car கள் வாடகைக்கு எடுப்பது அவளவு சிரமமுமில்லை விலையும் இல்லை .car ஐ 'start' பண்ணினேன் PARAS ஐ சுற்றுவோம் எனமுடிவெடுத்தேன். நெடுந்தீவு போல இரு மடங்கு சுற்றளவு தான் இருக்கும்.

மெதுவாக... 20 Kmph வேகத்தில் செலுத்தி அந்தத்தீவைச் சுற்றி வருவது பேரானந்தமாக இருந்தது. நீலக்குகைகளுக்குள் போவது போன்ற உணர்வு ஏற்பட்டது. பெரும்பாலும் ஒரே வெளியும் மேலேயும் நீலம் கீழேயும் நீலமுமாய் மிகஅழகானதீவு அது.

* * * * *

அந்தத் தீவிற்கு அருகில் இன்னுமொரு அழகிய தீவு இருந்தது. அதன்பெயர் 'NAUSA' அதற்குப் போவதற்கு கப்பல் போன்ற ஒரு FERY இருந்தது அந்த FERY Car களையும் ஏற்றிச் செல்லும். அந்தத் தீவையும் சுற்றிப் பார்ப்போம் என நினைத்து FERY இல் Car ஐ ஏற்றினேன். அது ஒரு அழகிய பயணம். PARAS தீவு மறைந்து ஒரு புள்ளியாகத் தெரிய NAUSA ஒருபுள்ளியாய் தெரிந்தது. இரு புள்ளிகளினை இணைக்கும் ஒரு நேர்கோட்டின் நடுப்புள்ளி போல அந்தக் கப்பலை உணர்ந்தேன் அற்புதமான ஒரு அனுபவம் அது.

NAUSA ஐ அடைந்ததும் என்னைப்போல வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் Hotel தேடிக் கொண்டிருந்தனர் ஓய்வெடுப்பதற்காக. எனக்கு எந்தக்களைப்பும் ஏற்படவில்லை. நான் Car ஐ இயக்கிய படியே பயணத்தைத் தொடர்ந்தேன்

அங்கே ஓரிடத்தில் பெரிய பாரந்தூக்கிகள் சகிதம் நிலத்தைக் குடைந்து கொண்டிருந்தனர் சிலர், அருகில் சென்று எனது Car ஐ நிறுத்தி "என்ன தோண்டுகிறீர்கள்"? என்று கேட்டேன்.

"இது ஒரு Archiology site ("புதைபொருள் ஆய்வுப் பகுதி") எனப் பதிலுரைத்தனர்.

வாசகர்களே ... என் நெஞ்சடைந்த ஒரு வேதனையை இங்கே பகிர விரும்புகிறேன் கிரேக்க நாகரிகம் தொன்மையானது. கி.மு.3000 ஆண்டுவரை பழையது. அந்த நாகரிகத்தை தோண்டிஎடுத்து எவ்வளவு அற்புதமாகப் பாதுகாக்கிறார்கள் கிரேக்கர்கள். மேலும் மேலும் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்...ஆனால் எமது தொன்மையான நாகரிகத்திற்கு என்ன நடந்தது? நாம் பாதுகாத்து வைத்திருந்த 'யாழ்அருங்காட்சிச் சாலை' இப்பொழுது எங்கே?

ஏட்டுச்சுவடிகளும், பழம் பெரும்புத்தகங்களும் நாம் போற்றிப் பாதுகாத்திருந்தோமே...! எமது யாழ் நூல் நிலையத்திற்கு என்ன நடந்த்து?

தாய்மண் மீட்க தமது இளைய உயிர்களை நீத்த மாவீரர்களை நிம்மதியாக உறங்க வைத்து அழகிய துயிலுமில்லம் எழுப்பிப் பாதுகாத்து வைத்திருந்தோமே கோப்பாயில்...! அதனை 'புல்டோசர்கள்' சகிதம் சிதைத்து அழித்தனரே நீசர்கள்.

அதனை நினைக்கையில் என் நெஞ்சு ஒரு முறைவிம்மித் தணிந்தது அடுத்த தலைமுறை எமது வேர்களை அறிந்துகொள்ள உதவுபவை அருங்காட்சிச் சாலைகளும் நூல் நிலையங்களும் மாவீரர் துயிலும்இல்லங்களும் அல்லவா...?

வரலாற்றுச் சின்னங்களைச் சிதைப்பவர்களை வரலாறு ஒரு பொழுதும் மன்னிக்கப் போவதில்லை.

* * * *

நெஞ்சில் பெருத்த சுமையுடன் என்தாய் நிலத்தை நினைத்தபடியே car ஐச் செலுத்தினேன்.

தூரத்தில் தெருவின் ஓரத்தில் ஒரு பெண்நின்று தன்கைப் பெருவிரலை நீட்டிக் கொண்டிருந்தாள். கைப்பெருவிரல் நீட்டி Carஐ மறித்தால்-'எனக்கு lift தருவாயா? என்று அர்த்தம். ஐரோப்பா முழுவதும் இப்படி lift கேட்கும் பலரை தெருவோரங்களில் காணலாம்.

நான் car ஐ அவள் ஓரமாக நிறுத்தினேன். கதவைத் திறந்து முன் சீட்டில் அருகில் அமர்ந்து கொண்டாள். அவளுக்கு 20-22 வயதிருக்கும் தலையை ஆண்கள் வெட்டியிருப்பது போல் வெட்டியிருந்தாள்.

"hello how are you? (எப்படி சுகமாய்இருக்கிறாயா?)" என்று கேட்டாள்.

"I am fine (நான் நலம்)" என்றேன்.

தனது பெயர் MARIYA என்று அறிமுகம் செய்து கொண்டாள். நான் அவளது முகத்தை ஏற இறங்கப் பார்த்தேன். ஏனெனில் அது கிரேக்கப்பெயர் இல்லை. MARIYA என்பது மேற்கு ஐரோப்பியர்களின் பொதுவான பெண் பெயர்.

எனது பார்வையை அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவள் சொன்னாள். தனது பேரன் பேத்திகள் கிரேக்கர்கள் என்றும் தனது தகப்பனார் கப்பல்கட்டும் தொழிலில் ஒரு 'எஞ்சினியர்' என்றும் அவர்பிரித்தானியா சென்றுஅங்கேயே வாழ்வை அமைத்துக்கொண்டிருப்பதாகவும் பிரித்தானியாவில் தான் பிறந்ததாகவும் தற்பொழுது பல்கலைக்கழகத்தில் Sociolgy (சமுதாயவியல்) படிப்பதாகவும்.

எனக்கு ஆங்கிலம் தெரிந்த ஒரு வழித்துணை கிடைத்த சந்தோஷத்தில் அவளை நோக்கி ஒரு புன்னகையை வீசினேன். பின்னர் என்னை அறிமுகப்படுத்தினேன். எனது நாட்டின் யுத்தம் பற்றிக் கூறினேன்.

உடனே அவள்-

"Please dont tell about

(தயவு செய்து அதுபற்றிச் சொல்ல வேண்டாம்)'' என்று சொன்னாள்

தான் அது பற்றி நிறையக் கேள்விப்பட்டதாகவும் மனிதாபிமானமற்ற எந்தக் கொடூரங்களையும் தன்னால் சகித்துக்கொள்ள முடியாதென்றும் கூறினாள். சொல்லிவிட்டு,

"நீ உன் தாய் நாட்டைப்பார்த்து எவ்வளவு காலம்?'' எனக் கேட்டாள்

" 15 வருடங்கள்" என்றேன்.

" நான் எனது 7 வயதில் இங்கே வந்தேன் இப்பொழுது 18 வருடங்கள் கழித்து மீண்டும் என் வேர்களைப்பார்க்க வந்துள்ளேன்" என்றாள்.

"வேர்கள்...என்றால்...." என்று இழுத்தேன்

" எனது தாத்தாவும் பாட்டியும் அவர்களுக்கு 75ம் 70வதும் வயதாகிறது. இங்கே PIZZA LAVODIA எனும் இடத்தில் சுற்றுலாப்பயணிகள் தங்கும் சிறிய விடுதியை நடத்துகிறார்கள்'' என்றாள்.

அவள் 15 வருடங்கள் கழித்து தன் வேர்களைத் தேடி வந்து விட்டாள். நானோ என் வேர்களைப் பிரிந்து 15 வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. சிறிய பெருமூச்சுடன் அவளைப் பார்த்தேன்.

"I can understand your feelings

(நான் உனது உணர்வுகளைப் புரிகிறேன்)" என்றாள்

"Thanks (நன்றி)" என்றேன்

"நீ இப்பொழுதும் தாத்தா வீட்டுக்கா போகிறாய்?" என்று கேட்டேன்.

"ஆம்'' என்றுதலையாட்டி விட்டு என்னை நோக்கித் திரும்பிப் பார்த்து

"நீ என்னைப் பணம் வாங்காமல் என் தாத்தா வீட்டில் விட்டு விட்டால் நீ என் தாத்தாவின் விடுதியில் ஒரு நாள் இலவசமாகத் தங்குவதற்கு நான் ஒழுங்கு செய்து தருகிறேன்" என்றாள்.

எனக்கு அது சந்தோஷமாகவே பட்டது உடனேயே சம்மதித்தேன்

PIZZA LAVODIA ஐ நோக்கி car திரும்பியது Mariya வழி காட்டிக்கொண்டே போனாள். அந்தப் பயணம்வெகுசுவாரசியமாக இருந்தது. அவள்எனக்கு கிரேக்க நாகரிகத்தின் நெளிவு சுளிவுகளையெல்லாம் விளங்கப் படுத்திக் கொண்டே போனாள். கிரேக்கத்தில் உள்ள தீவுக் கூட்டங்களைப் பற்றிச் சொன்னாள்.

பெண்கள் அதிகமாக வாழ்கின்ற ஒரு தீவுபற்றிச் சொன்னாள். தன்னினச் சேர்க்கைப் பெண்கள் அந்தத் தீவில் அதிகம் குடியிருக்கிறார்கள் என்றும் அவர்கள்வாழ்கையில் ஆண்துணையையே நினைப்பதில்லை என்றும் சொன்னாள். அவளது கதைகளையும் விபரங்களையும் ஆவலுடன் ஆச்சரியமீதியில் கேட்டுக் கொண்டேபோனேன்.

நாங்கள் அறியாத பல விஷயங்கள் இந்த உலகில் ஏராளம். நான் இன்னும் தெரிந்து கொள்ள எவ்வளவு விடயங்கள் இருக்கின்றன. இதே நாட்டில் வாழ்ந்த சோக்கிரட்டீஸ்தான் சொன்னான்

"தெரியாதவற்றின் எல்லைகளைத் தெரிவது தான் அறிவு" என்று.

(அடுத்த வாரம் சந்திப்போம்)

---

## மருத்துவர் தாக்கப்பட்டதன் எதிரொலி
# ஊழியர் வேலைநிறுத்தப் போராட்டம்

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாளவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் வைத்தியசாலையின்வழமைநிலை பாதிக்கப்பட்டது.

கடந்த சனி இரவு மாவட்ட வைத்திய அதிகாரி தனது கடமை முடிந்து வீடு திரும்பும் வழியில் குழுவொன்றினால் தாக்கப்பட்டு அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டது.

அரசியல் பின்னணியொன்றில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும், சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியும் இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அப் பிரதேசத்திலுள்ள ஏனைய மருந்தகங்களின் ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையினால் அந்த மருந்தகங்களிலும் வழமை நிலை பாதிக்கப்பட்டது. (32)

# வீட்டு மின்இணைப்பு கற்கைநெறி இறுதிப்பரீட்சை நடாத்த ஏற்பாடு

(கிளிநொச்சி)

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் பூநகரி பிராந்திய நிலையத்தில் நடாத்தப்பட்ட வீட்டு மின் இணைப்பு கற்கைநெறியின் இறுதிப் பரீட்சைஇம்மாதம் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கற்கைநெறியின் செய்முறைப் பரீட்சை நாளை 23 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன கிளிநொச்சி பிரதான நிலையத்திலும், அறிமுறைப்பரீட்சை கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவன பூநகரி பிராந்திய நிலையத்தில் 24 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கும் நடைபெறும். எனவே அனைத்துக் கற்கை நெறியாளர்களையும் இப்பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு வீட்டு மின் இணைப்பு கற்கைநெறி விரிவுரையாளர் சபேசன் அறியத் தந்துள்ளார். (15)

# சச்சிமாஸ்ரர் கொலைதொடர்பான சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச்சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபரான மகேந்திரன் புவிதரன் நேற்று முன்தினம் 3ஆவதுதடவையாக நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. இதனையடுத்து இவரது விளக்கமறியலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நீடித்துள்ளது.கடந்த யூலை மாதம் 15 ஆம் திகதி கருணா குழுவைச் சேர்ந்த சச்சி மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோர் சிறைச்சாலைக்குள் வைத்து குறிப்பிட்ட சந்தேக நபரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

சந்தேக நபர் பாதுகாப்பின் நிமித்தம் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மொனராகலை சிறைச்சாலைக்கு அன்றைய தினம் மாற்றப்பட்டு பின்பு தற்போது பதுளைசிறைச்சாலையில் வைக்கப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் 3ஆவது தவணையில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இந்த சந்தேக நபர்பாதுகாப்பு காரணங்களுக்காக மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படவில்லை.

இந்த கொலைகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலை யில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள சிறைச்சாலை உத்தியோகத்தரான தம்பிராசா அருளம்பலம் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து நீதிபதி இருவரது விளக்கமறியலையும் எதிர்வரும் 5ஆம் திகதிவரை நீடித்துள்ளார்.

## வடமராட்சிக்கிழக்கு நாகர்கோவில் படுகொலையில் 09ஆம் ஆண்டு இன்றாகும்

# நாகர்கோவில் மாணவர்கள் மீது இனவாதப்படைகள் புரிந்த கொடூரம்

**22.09.1995** அன்று வடமராட்சிக் கிழக்கில் ஒரு பெரும் சோக வரலாறு எழுதப்பட்ட நாள். இந்நாளை அம்மக்களால் ஒரு போதும் மறக்கமுடியாத கொடிய நாளாய் உள்ளது அன்று வழமை போல் நாகர்கோவிலில் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். பாடசாலை கல்வியில் மாணவர்கள் கூடிய கவனம் செலுத்தியிருந்தனர். யாருமே, எந்தவொரு மாணவனோ அல்லது ஆசிரியர்களோ அல்லது நாகர்கோவில் வாழ் மக்களோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அன்று மதியம் 1.30 மணியளவில் வடமராட்சிக் கிழக்கில் நாகர்கோவில் பகுதியின் வான்பரப்பில் திடீரென சிறிலங்கா வான்படையின் இரு புக்காரா விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன. அப்போது நாகா கோவில் பகுதியில் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். அப்பகுதியில் பெருமளவான இடம்பெயர்ந்தோர் முகாம்கள் இருந்தன. சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்குப்பகுதியான மயிலிட்டி, மாதகல், பலாலி, வடமராட்சி கிழக்கின் ஒரு பகுதியான வெற்றிலைக்கேணி, ஆழியவளை , கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு, திருகோணமலை, மட்டக்களப்பு, தீவகம் எனப்பல இடங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்த இடம்பெயர்ந்த முகாம்கள் நாகர்கோவிலில் இருந்தன.

சிறிலங்கா இராணுவம் எப்போது இராணுவத்தினை அதிகமாக இழக்கிறதோ அதற்குப்பதிலாக தமிழ் மக்கள் மீது வான்படை தனது இலக்கைத் தீர்க்கத் தவறவில்லை. அதேபோன்று 1995 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் முல்லைத்தீவுக் கடலில் வைத்து கடற்புலிகளால் சிறிலங்காக் கடற்படை மீது தாக்குதல் நடத்தப்பட்டு 'ஜரிஸ்மோனா' என்ற கப்பல் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது. இதற்குப் பழிவாங்கும் நோக்குடன்தான் நாகர்கோவில் கிராமம் தெரிவு செய்யப்பட்டது. சிறிலங்கா வான்படையால் நாகர்கோவில் வடக்கில் புளியடிச்சந்தியில் பாடசாலை அருகே சந்தையும், சந்தையின் கிழக்கே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையில் நிவாரணம் வழக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கும் மக்கள் அதிகமாகக் கூடி நின்றார்கள். புக்காரா வட்டமிட ஆரம்பித்த போது, மக்கள் மத்தியில் பெரும் பீதி, மக்கள் சிதறியோடினர். அப்போது புக்காரா ஒரு குண்டை சந்தையின் கிழக்குப் புறம் வீசியது. பாடசாலையிலிருந்த மாண வர்களும், ஆசிரியர்களும் சிதறியோடினர். பாடசாலையிலிருந்து ஓடிவந்த சிறுவர்கள் சந்தியிலுள்ள புளியமரத்தின் கீழே பாதுகாப்புத் தேடி ஒதுங்கிக்கொண்டனர். அவனுடைய இலக்கும் பாடசாலைப் பிள்ளைகளாகத்தான் இருந்தது. புளியமரத்தின் மீது புக்காரா குண்டை வீசியது. எங்குமே மரண ஓலம். புளியமரத்தடியில் குருதி வெள்ளம் எங்கு பார்த்தாலும் சதைத்துண்டங்கள். வான்படை தனது நரபலியை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டது.



காயமடைந்த மாணவர்களும், பொதுமக்களும் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இப்படுகொலையில் 18 மாணவர்கள் உட்பட 23 பேர் சாவடைந்தனர். மாணவர்கள் 15 பேர் படுகாயமடைந்தனர். பொது மக்கள் உட்பட 25 பேர் சிறு காயங்களுக்குள்ளாகினர். இரு மாணவர்கள் அங்கவீனமடைந்தனர். அதில் ஒரு மாணவி தனது இரு கால்களையும் இழந்துள்ளார், என்பதும் குறிப்பிடத்தக்கது. சில குடும்பங்களில் இரு பிள்ளைகளை இழந்த பெற்றோரும், தாயை இழந்தபிள்ளை, தந்தையை இழந்தவரும், கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனுமாக எவ்வளவோ உயிர்கள் பறிக்கப்பட்டன. அன்றுமாலை 6.30 மணிக்கு இலங்கை வானொலியின் செய்தியில் தலைப்புச்செய்தியாக நாகர் கோவிலில் விமானப்படையின் குண்டுவீச்சில் புலிகளின் தளம் அழிப்பு. பெருமளவான புலிகள் பலி; என்று கூடச்சொல்லப்பட்டது. நடந்தது என்ன? பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தை வடமராட்சிக் கிழக்கோ நாகர்கோவிலில் அன்று வாழ்ந்த மக்களோ மறப்பதென்பது கடினம். ஏன்? இதைத் தமிழீழ மக்களே மறக்கமாட்டார்கள். இச்சம்பவத்தில் சாவடைந்தவர்கள் நினைவான சென்ற ஆண்டு இதே நாள் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் நினைவுத்தூபி கட்டப்பட்டிருக்கிறது. தற்போது இப் பாடசாலை பருத்தித்துறையில் இயங்கிவருகின்றது. இந்த நாகாகோவில் படுகொலையின் 09 ஆம் ஆண்டு இன்றாகும்.

இ.முரளீதரன்
வடமராட்சி
கிழக்குசெய்தியாளர்

---




## 13.09.2004-19.09.2004

**13**

⇨ சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைத் தென்பகுதி ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்.



ஊடகவியலாளர் சந்திப்பு...


⇨ சனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுச் செயலாளருமான ஹரீம்பீரிஸ் யாழ். விஜயம்.

⇨ ஹொலிவூட் புத்தா என்ற திரைப படத்தைத் தடைசெய்யுமாறு கோரி கொழும்பு அமெரிக்கத் தூதரகம் முன் பௌத்த பிக்குமார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

⇨ இந்தியக் கடற்படைத்தளபதி அருண் பிரகாஷ் சனாதிபதி சந்திரி காவைச் சந்தித்து இலங்கை கடற் படைக்கு உயர் நிபுணத்துவப் பயிற்சி வழங்குவது குறித்து ஆராய்ந்தார்.

**14**

⇨ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்.



அரசியல்துறைப் பொறுப்பாளருடன்...

⇨ தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனையும், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பராவையும் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்.

⇨ இந்தியக்கடற்படைத் தளபதி திருகோணமலைக்கு விஜயம்.

⇨ தென்னிலங்கை ஊடகவியலாளர் களுக்கு கிளிநொச்சியில் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

**15**

⇨ தியாகதீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழீழமெங்கும் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின.



திலீபன் நினைவு நிகழ்வு...

⇨ நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்.

⇨ தீர்வுகள் எதுவுமின்றி வெறுமனே சமாதானப் பேச்சுக்கள் மட்டும் முன்னெடுக்கப்படுவதை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பவில்லையென யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தம்மைச்சந்தித்த எரிக் குழுவினரிடம் வலியுறுத்தினார்.

⇨ மந்துவில் படுகொலையின் 4ஆம் ஆண்டு நினைவுநிகழ்வு மந்துவில் பகுதியில் அமைந்துள்ள நினைவுக்கல் வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

⇨ இந்திய போர்க்கப்பலான ஐ.எஸ்.எஸ். கங்கா கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை.

⇨ நிதித்துறையின் நிதிமேலாண்மையியற் கல்லூரி கிளியில் திறந்துவைக்கப்பட்டது.

**16**

⇨ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் சந்தித்தார். இதன் போது சமாதானம் தொடர்பாக நழுவல் போக்கையே அரசும், அதன் பங்காளிகளும் கைக் கொள்கின்றனர் என வலியுறுத்தப்பட்டது.

⇨. புலிகள் சமாதானப் பேச்சில் நம்பிக் கையற்றவர்களாக போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி வருகிறார்களென சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டது.

⇨ புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**17.**

⇨ சிறிலங்கா இராணுவம் தமிழ்க் குழுக்களுடன் இணைந்து செயற்படு வதை நிறுத்த வேண்டுமென நோர் வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் பத்திரிகை ஆசிரியர்களிடம் தெரிவித்தார்.

⇨ தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை சந்தித்தனர்.

⇨ யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் அலுவலர்கள் யாழ். வெகுசன அமைப்பினரை சந்தித்தனர்.

⇨ நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தனர்.

**18**

⇨ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்.

⇨ ஈ.பி.டி.பியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், சிரேஷ்ட உறுப்பினருமான பவான் புத்தளத்தில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலி.

⇨ "பனைச் செல்வம்" எனும் நூல் வெளியீட்டுவிழா யாழ்.பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.



வெளியீட்டு நிகழ்வில்.....

**19**

⇨ "திருக்குமரன் கவிதைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா யாழ்.நாவலர் மண்டபத்தில் இடம் பெற்றது.

⇨ சமாதான முயற்சிகளுக்கு புலிகள் தடையாக உள்ளனர் என சனாதிபதியின் குற்றச்சாட்டிற்கு புலிகளின் சமாதானச் செயலகம் இணையத்தளம் மூலம் மறுப்பை வெளியிட்டது.

# நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

# மையக்கிராமத் தெரிவிற்கான விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின் கீழ் மையக் கிராமங்களின் தெரிவு உடனடியாக ஆரம்பமாகித் திட்டத் தெரிவு நடைமுறைகள் பூர்த்தியானபின் 2005 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களின் நியாப் -II திட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே பொது அமைப்புக்கள் மூலமாக மையக்கிராமத் தெரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் அனுப்ப முதல் தங்கள் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துரையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து குறிப்பிட்ட மையக்கிராமங்களின் கிராமசேவை உத்தியோகத்தர் மூலமாக சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களிடம் அவைகளை உடனடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களைப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு, திட்டத் தெரிவு நடைமுறைகளுக்கிணங்க புள்ளியிடப்பட்டு, உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தெரிவுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இறுதித்தெரிவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான மாவட்டத் தெரிவுக்குழுவால் இறுதியாக்கப்படும்.

எந்திரி.ச.சு.சிவகுமார்
பிரதித்திட்டப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

## மாதிரி விண்ணப்பப் படிவம் நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்ட .......................... மையக்கிராமத்தின் பொது அமைப்புக்களில் ஒன்றான.................................. இன் நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் நியாப்-II திட்டத்தின் மூலம் பெறும் மையக்கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதியினைப் பெறுவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாப்-IIஎமக்கு நிதியுதவி வழங்கும் பட்சத்தில் அத்திட்டத்தினை கீழ்வரும் நிபந்தனைகளுடன் ஏற்பதாக உறுதியுரை வழங்குகின்றோம்.

01.திட்டத்தினால் அனுமதிக்கப்படும் நன்மைகள், கிராமத்தில்வசிக்கின்ற தேவைப்படும் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

02.திட்ட மூலதனத்தில் இம் மையக்கிராமத்திற்கான ஒதுக்கீட்டின் 7 லிருந்து 10 வீதமான வேலைகளைப் பயனாளிகள் பங்களிப்புச் செய்தல்.

03. திட்டத்தினால் ஏற்படுத்தித் தரப்படும் சொத்துக்களைத்தொடர்ந்து செயற்படுத்தி பராமரித்து வருதலை உறுதிப்படுத்தல்.

நியாப்-II திட்டத்திலிருந்து நிதி பெறுவதற்காக மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பொதுக்கூட்டம் ஒன்றுகூட்டி அதில் மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைவாக இத்திட்டத்தில் நிதிபெறுவதற்கு மக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களின் கையொப்பங்கள் அடங்கிய கூட்டறிக்கையுடனும்,கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடனும் இணைத்துள்ளோம். இந்தக்கிராமத்தை நியாப்-II எடுத்து அபிவிருத்தி செய்யுமாறு கீழ் கையொப்பம் இடப்பட்ட மேற்படி பொது அமைப்பின் நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினர்களாகிய நாங்கள் இவ்விண்ணப்பம் மூலம் கோருகின்றோம்.

| பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 01 .................................. | தலைவர் | .............................. |
| 02 .................................. | செயலாளர் | .............................. |
| 03 .................................. | பொருளாளர் | .............................. |

திகதி:..............................

.......................................
சங்கத்தின் பதிவு இலக்கமும்,
இறப்பர் முத்திரையும்

## பொது அமைப்பால் பூரணப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நியாப் IIமையக் கிராமத்தின் ஆரம்பத் தகவல் அறிக்கை

### 01. மையக் கிராமத்தின் விபரங்கள்.

1.1) மையக் கிராமத்தின் பெயர்:..................................

1.2) கிராமசேவகர் பிரிவு:-..................................

1.3) உதவி அரசாங்க அதிபர் பிரிவு: ..................................

1.4) கமநல சேவை நிலையத்தின் பெயர்:-..................................

1.5) மையக் கிராமத்தில் குளமிருப்பின் அதன் பெயர்:- ..................................

1.6) குடும்ப எண்ணிக்கை:-..................................

1.7) உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:..................................

1.8) உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளவந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................................

1.9) இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வரவிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................

1.10) ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து இக்கிராமத்திற்கு வருகை தந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................

1.11) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கட்டுமானங்கள்:-

அ) வீதி இல்லை/ நடுத்தரம்/ முற்றாக

ஆ) பாடசாலை இல்லை/நடுத்தரம்/முற்றாக

இ) வீடுகள் இல்லை/நடுத்தரம்/முற்றாக

ஈ) ஏனைய கட்டுமானங்கள்

பெயா

............................இல்லை/நடுத்தரம்/முற்றாக

............................இல்லை/நடுத்தரம்/முற்றாக

### 02. மையக் கிராம நிலப் பயன்பாடு

2.1) நிரந்தரமாக விவசாயம் செய்யப்படும் மேட்டுநிலம் (ஏக்கர்):-..............................

2.2) குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலம் (ஏக்கர்):-..............................

2.3) பாவனையில் இல்லாத நிலம் (ஏக்கர்):-......................

2.4) பிறதேவைகளுக்கு (கட்டடம்,கிணறுகட்ட) பயன்படுத் தக்கூடிய காணியுள்ளதா? ஆம்/ இல்லை:-

2.5) வயற்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-

அ.கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................

ஆ.கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................

2.6) விவசாயக் காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-

அ.கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................

ஆ.கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................

2.7) காணிஉரிமை எதுவுமில்லாதவர்களின் எண்ணிக்கை

### 03.உட்கட்டுமான வசதிகள்

3.1) பாடசாலை உள்ளதா? ஆம் / இல்லை

3.2) பொதுக்கிணறு உள்ளதா? ஆம்/இல்லை- ஆம் எனின் எத்தனை:-......................

3.3) பொதுமண்டபம் உள்ளதா? ஆம் / இல்லை

3.4) நீர்ப்பாசனக் குளம் உள்ளதா?ஆம் / இல்லை

3.5) சுகாதார நிலையம் உள்ளதா?ஆம் / இல்லை

3.6) பொதுச்சந்தை உள்ளதா?ஆம் / இல்லை

3.7) வீதிகளின் நிலைப்பாடு:- நல்லநிலையிலுள்ளது/ இடைத்தர நிலையிலுள்ளது/மிகவும் மோசமானது/ புதிதாகப் போடப்படல் வேண்டும்.

### 04.கிராம அமைவிடம் (k.m)

4.1) மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-

4.2) உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-

4.3) கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து தூரம்:-

4.4) கிட்டவுள்ள அரச வைத்திய நிலையத்திலிருந்து தூரம்:-

4.5) கிட்டவுள்ள அரச பாடசாலையிலிருந்து தூரம்:-

4.6) கிட்டவுள்ள தபால் அலுவலகத்திலிருந்து தூரம்:-

4.7) நியாப் திட்டப் பணிமனையிலிருந்து தூரம்:-

### 05.கிராம மக்களின் பிரதான வருமானம்

5.1) மேட்டுப்பயிர்ச் செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

5.2) நெற்பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

5.3) ஏனைய வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 06.வறுமையின் தன்மை

6.1) நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:-

6.2) யுத்தப்பாதிப்புக்களினால் பெண்களின் தலைமையிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

6.3) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற அங்கத்தவர்களையுடைய குடும்பங்களின் எண்ணிக்கை:-

6.4) யுத்தப்பாதிப்புக்களினால் அநாதையாகவுள்ளவர்களின் எண்ணிக்கை:-

6.5) கிராமத்தில் காணியற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை:-

6.6) நிரந்தர வீடில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 07.மிகவும் பிரயோசனமான கிராமத்திலுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின் விபரங்கள் (இருப்பின் மட்டும்)

7.1) குளம்/ அணைக்கட்டு/ குட்டையின் பெயர்:-

7.2) அதற்குச்செல்லும் பாதையின் தன்மை:-

7.3) கிராமத்திலிருந்து அதன் தூரம்:-

7.4) அதன் தற்போதைய நிலைமை:-

1) இயங்குகின்றதா:- ஆம்/ இல்லை

2) உடைப்பெடுத்துள்ளதா:-ஆம்/ இல்லை

3) கூடிய புனரமைப்புச் செய்யப்படல் வேண்டுமா:- ஆம்/இல்லை

7.5) பயிர் செய்யப்படும் காணியின் அளவு:-

1) பெரும்போகம்:-................ 2) சிறுபோகம்:-............................

7.6) கடந்த ஆண்டு பயிர்செய்திருப்பின் அதன் அளவு:-

1) பெரும் போகம்:-.................. 2) சிறுபோகம்:- ......................

7.7) 1. பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை:-......................

2. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-...............

3. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்தை விடவேறு இடத்திலிருந்து நீர்பெறும் குடும்ப எண்ணிக்கை:-...........

4. காணியற்ற, ஆனால் இக் குளத்திலிருந்து நீர் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 08.அபிவிருத்தித் திட்டங்கள்

8.1) இக் கிராமம் வேறு ஏதேனும் நிறுவனங்களுக்கூடாக தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றதா?................

8.2) 10வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்:-

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|

8.3) திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய பொது நிறுவனங்களுக்கு அனுபவம் உண்டா? ஆம்/ இல்லை

8.4) கொடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கை இலக்கை குறிப்பிட்ட நாளில் முடிக்க தடைகள் உண்டா? ஆம்/ இல்லை

### 09. வேறு தகவல்கள்

9.1) அழிவுகள் விஸ்தீரணம் (மொத்தமாக அல்லது குறைவாக):- ..............................................................

9.2) நெற்செய்கை மேற்கொண்ட விஸ்தீரணம்:-............................ சென்ற சிறுபோகம்:-.............. சென்ற காலபோகம்:-...............

9.3) சென்றவருடம் செய்கை பண்ணப்படாவிடில், எவ்வளவு காலம் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டது:-............................ மாதம்:-.............................. வருடம்:-..............................

9.4) மையக்கிராமத்திலிருந்து குளம் எவ்வளவு தூரம்..........Km

9.5) மையக்கிராமத்திலிருந்து குளத்துக்குப் பாதை,பாதையின் வகை:-.............................. தூரம்:-..................................

### கிராம சேவையாளரது சிபார்சு

எனக்குத் தெரிந்த அறிவிற்கு மேல்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என சிபார்சு செய்கிறேன்.

ஒப்பம்:------------------------------------------------ திகதி:----------------------------------

**பிரதித்திட்டப் பணிப்பாளர்**
**நியாப், முல்லைத்தீவு மாவட்டம்,**

இவ் விண்ணப்பங்களுக்கு நியாப் -II நடைமுறைகளுக்கிணங்க புள்ளியீடப்பட்டபோது இக்கிராமம் பெற்ற புள்ளிகள்.......... ஆகும். இக்கிராமம் எமது தெரிவுக்குழுவின் நிரற் படுத்தலில்........... ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:- ............................................ (சி.10210) பிரதேச செயலாளர்:-.........................................

# வழக்கறிஞரின் சேவைகள் பரஸ்பரம் அனுமதிக்கப்பட வேண்டும்

## இந்திய நீதித்துறை இணையமைச்சர்

பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளில் இந்திய வழக்கறிஞர்கள் பணியாற்ற அனுமதிக்கும் பட்சத்திலேயே வெளிநாட்டு வழக்கறிஞர்கள் இந்தியாவில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிலைப்பாட்டில் இந்தியா இருப்பதாக,மத்திய சட்டம் நீதித்துறை இணையமைச்சர் வெங்கடபதி கூறியுள்ளார்.புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய பிரிட்டிஷ் சட்ட உறவுகள் பற்றிய கருத்தரங்கில் பேசிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய பிரிட்டிஷ் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டேவிட் ஹேமி,சர்வதேச வல்லுனர்களின் பங்களிப்பினால் ஏற்படும் நன்மைகள் குறித்து எடுத்துரைத்துள்ளார்.

பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இல்லாத நிலை காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.இந்தியாவில் இரண்டுகோடி20இலட்சம் வழக்குகள் தீர்வு காணப்படாமல் தேங்கி இருப்பதாக இக் கருத்தரங்கில் கூறப்பட்டுள்ளது.


19 வருடகால தனித்துவமான பயிற்சி நிலையம்

**கலாலயா**

**பயிற்சியகம்**

[பெருமாள் கோவிலுக்கு அண்மையில்] **யாழ்ப்பாணம்**

**மகளிருக்கான துரித 3மாத காலப் பயிற்சிகள்**

- **கேக் ஐஸிங்-** சகல விதமான ஐஸிங் 22வகையான கேக் அமைப்புகள், மாச் சீனி மலர்கள் (sugar Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்
- ★ **கூந்தல் அலங்காரம்-** 20இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல் FABRIC PAINTING - SAREEPAINTING,கைக்குட்டை,தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSSPAINTING, POT PAINTING, மண் PAINTING.
- ★ **உணவுகள்தயாரித்தல்-** மேலைத்தேய, கீழைத்தே மற்றும் சீன உணவுகள் தயாரித்தல்.
- ★ **கைவேலை-** கடதாசிஅலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன்வேலை.

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

இத்துடன் அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2 நாள் வகுப்புக்களாக நடைபெறும்.

**6மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்**

- ★ **தையல் பயிற்சி -** குழந்தைகள், சிறுவர்,மகளிருக்கான உடைகள் தைத்தல்.
- ★ **பூவேலை -** கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்

**சனி,ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்: 25.09.2004**
**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 27.09.2004**

☞ **மேலும் விபரங்களை வியாழன்,வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்து கொள்ளலாம்.**

**பதிவாளர்.**

(சி-10406)


# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
20 - 07 - 1975

தாயகமண்ணில்
22 - 09 - 1996





**லெப்டினன்ட் இளங்குமரன்**
(பாலசுப்பிரமணியம் பாலேந்திரன்)
**செல்விபுரம் பூநகரி**

தமிழீழந்தனை மீட்க
தலை நிமிர்ந்து சென்றவனே,
பகை வீழ்த்திப் பெருமைபெற்று
புயலாகிப் போனாயே,
எம்மை விட்டுப் பிரிந்து -நீ
எண் ஆண்டு சென்றாலும்
எம் நெஞ்சில் உன் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும்.

முகவரி,
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(5116)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

---

**மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு**
**வடக்கு - கிழக்கு மாகாணசபை**
**போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் [கார்ப்]**
**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆஅவ" கடன் இல.2043 – SRI(SF)**

# கேள்வி அறிவித்தல் இல: 32

## குடிசார் வேலைகளைப்பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின்(கார்ப்) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ('ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கானஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த (ICTAD) பதிவு | கேள்வி பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/HS/04 | முல்லைத்தீவு,மாவட்ட பொது வைத்திய சாலை நிர்மாணம் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு தொகுதி -I | M 3 | 1,000,000/= |

3. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தலின் கீழ் M3 (கட்டடங்கள்) அல்லது அதற்கு மேலான தரத்தில் தம்மை உள்ளூர் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொண்ட எல்லா கம்பனிகளுக்கும் இலங்கை தேசிய ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் (NCASL) அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடொன்றைச் சார்ந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

4. தகுதி வாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி சம்பந்தமான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், 140,மின்சார நிலையவீதி, திருகோணமலை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்வதோடு கேள்வி ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொ.பே.026 2227434, பக்ஸ் 026- 2227401 ஈமெயில் necord@sltnet.lk

5. ஒப்பந்த ஆவணங்களை 2004புரட்டாதி 22 இல் இருந்து 2004 ஐப்பசி 18வரை காலை 9.30இலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 10,000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு ) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

6. கேள்வி கோருபவர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 7ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்படவேண்டும்.

7. அவ் வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை NECORD 140, மின்சாரநிலையவீதி, திருகோணமலை என்றமுகவரிக்கு 2004 கார்த்திகை மாதம் 08ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

8. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் 2004 ஐப்பசி மாதம் 22ஆம் திகதி அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.


9. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**சி.ரங்கராஜா**
**பிரதம செயலாளர்,**
**தலைவர்,**
**ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்**
**(நிக்கோட்)**
**திருகோணமலை.**

(சி-10405)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council

# அரையிறுதியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி பழிதீர்த்துக் கொண்டது இங்கிலாந்து அணி!



ஐ.சி.சி. கிண்ணத்துக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் உலகச் சம்பியன் அவுஸ்திரேலியாவை ஆறு விக்கெட்டுக்களால் தோற்கடித்த இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மிகவும் ஆவலுடன் எதிர்



பார்க்கப்பட்ட இப்போட்டி பரபரப்புக்கு மத்தியில் நேற்று எட்பாஸ்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

அவுஸ்திரேலிய அணியிடம் பலமுறை தோல்வி அடைந்த இங்கிலாந்து அணியை அவுஸ். அணி இம்முறையும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழையும் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கி முன்னைய தோல்விகளுக்குப் பழி தீர்த்துக் கொண்டது இங்கிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் இறுதிக் கணங்களில் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்தமை அவுஸ்திரேலியா எதிர்பார்த்த எண்ணிக்கையை அடையாமற் போனாமைக்குக் காரணமாகியது..

குறிப்பாக, ஏழாவது விக்கெட்டாக பிரெட்லீயும், எட்டாவது விக்கெட்டாக கிளெஸ்பியும் அடுத்தடுத்து டரன் கௌவ்வின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.


துடுப்பாட்டத்தில் அதிகப் படியாக 65 ஓட்டங்களை டெமியன் மாட்டீன் பெற்றுக்கொண்டார். அடுத்து மைக்கல் கிளார்க் மிக வேகமாக 42 ஓட்டங்களைப் பெற்றார். லீமன் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மிகச் சிறப்பாக பந்து வீசிய டரன் கௌவ் 3 விக்கெட்டுக்களையும், அணித் தலைவர் வோகன் பத்து ஓவர்கள் பந்துவீசி42ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 260 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் புகுந்த இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஓட்டங்களைக் குவித்தபோது சோலங்கி கிளெஸ்பியின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரெஸ்கொதிக்குடன் இணைந்த அணித் தலைவர் வோகன் நிதானமாக ஆட ரெஸ்கொதிக் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க இங்கிலாந்து அணி வெற்றியை நோக்கி வெற்றிகரமாக நகர்ந்தது.

இறுதியில் 46.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது.

இதன் மூலம் அவுஸ். அணியின் ஐ.சி.சி. கிண்ணத்தை முதற்றடவையாகக் கைப்பற்றும் கன



வைக் கலைத்து முதற் தடவையாக அவ்வாய்ப்பைப் பெற்றது இங்கிலாந்து.

துடுப்பாட்டத்தில் ரெஸ் கொதிக் 81 ஓட்டங்களையும், வோகன் 87 ஓட்டங்களையும் பெற்றனர். அன்ருஸ்ரோஸ் 42 பந்துகளை எதிர்கொண்டு 52 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

பந்து வீச்சில் பிரெட்லீ இரண்டு விக்கெட்டுக்களையும்,



கிளெஸ்பி, அன்ரூ சைமன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக வோகன் தெரிவானார்.

வோகன் இப்போட்டியில் பெற்ற 87 ஓட்டங்களே ஒரு நாள் போட்டியில் பெற்ற அதிகபட்ச ஓட்டமாகும்.




## சிம்பாப்வேக்கு எதிரான விசாரணை ஊஇல்

சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்குள் வகுப்புவாதத்தை ஏற்படுத்தியதாக சிம்பாப்வே அரசுக்கெதிரான குற்றச்சாட்டை விசாரிக்க சர்வதேச கிரிக்கெட் சபை மேலும் காலம் கடத்துவதாகக் கூறுவதில் உண்மையில்லை எனச் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இது பற்றிய விசாரணை வரும் 29ஆம் திகதி நடத்தப்படும் என சபை தெரிவித்துள்ளது. ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன் சிம்பாப்வே அணித்தலைவர் நிறைய அனுபவமில்லாதவர்களைக் கொண்ட தமது கிரிக்கெட் சபையினர் கறுப்பர்களுக்கு அணியில் முன்னுரிமையளிப்பதாகவும் வீர் தெரிவு நடைபெறுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இவ்விவகாரம் நீண்ட தூரம் சென்றதால் அணி வீரர்கள் 15 பேரும் நீங்கிச் சென்றனர். அத்துடன் கடந்த மே மாதம் சிறிலங்காவிடம் படுதோல்வியடைந்ததால் டெஸ்ட் அந்தஸ்த்தும் பறிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட்டில் இந்திய சட்டவாளர் ஒருவரும் தென்னாபிரிக்கவின் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரும் கூடி குழு விசாரணை நடத்தினர். இதன் பெறுபேறு லாகூரில் அடுத்த மாதம் நடைபெறும் கூட்டத்தில் வெளியிடப்படும்.



## இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்று பாகிஸ்தான் – மேற்கிந்தியதீவு பலப்பரீட்சை




ஐ.சி.சி. கிண்ணத்துக்கான இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்று நடைபெறுகின்றது.

இதில் பலமான பாகிஸ்தான் அணியை லாறா தலைமையிலான மேற்கிந்தியத்தீவு அணி எதிர்கொள்கின்றது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் பெரிய போட்டி ஒன்றில் அரையிறுதி வரை முன்னேறியுள்ள மேற்கிந்தியத்தீவு இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதும்,பலமானபந்து வீச்சுத் துடுப்பாட்ட வரிசையை கொண்டுள்ள பாகிஸ்தான் அணியும் இறுதிப் போட்டிக்காக கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தத்தில் இப்போட்டியும் இறுதி வரை பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்படுகிறது.

## விக்கெட் காப்பாளர் பார்தீவ் பட்டேல் திருமண பந்தத்தில் இணைந்தார்



இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர்களில் ஒருவரான 19 வயதான பார்தீவ் பட்டேல் திருமண பந்தத்தில் இணைந்துள்ளதாக பரபரப்புச் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இதனால், அவரது குடும்பமே ஓர் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. அவரது குடும்பத்திற்குத் தெரியாமல் தனது காதலியை அழைத்துச் சென்று ராஜ்கோட்டில் உள்ள ஓர் ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளார்.

## இங்கிலாந்தின் சிம்பாப்வே சுற்றுலா பிளின்டொப்பும் விலகினார்?

சிம்பாப்வேக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணியில் இருந்து ஏற்கனவே விலகியுள்ள ஹார்மிஷனுடன் ஏனைய வீரர்களும் இணைந்து கொள்வார்களா என்ற சர்ச்சை எழுந்திருப்பதாக இங்கிலாந்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.இதில், அன்ரு பிளின்டொப் இணைந்து கொள்ளலாம் என சூசகமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹார்மிஷனுடன் ஏனைய வீரர்களும் இணைந்து கொண்டால் அவ் அணிக்கு பலவீனமாக அமையும் என்பதைவிட ஏற்கனவே இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஒட்டிக்கொண்ட விடயத்தை அது மீறிய செயலாக மாறிவிடுமோ என்பதுதான் அந்த சர்ச்சையாக எழுந்துள்ளது.

## மழை குறுக்கிடாமல் இருந்திருப்பின் இங்கிலாந்தை வீழ்த்தியிருப்போம்

மாவன் அத்தப்பத்து

கடந்த 17ஆம் திகதி றோஸ்போல் அரங்கில் நடைபெற்ற ஐ.சி.சி சம்பியன் போட்டியில் மழைகுறுக்கிடாமல் இருந்திருப்பின் தனது அணி இங்கிலாந்தை வீழ்த்தி அரையிறுதிக்குள் பிரவேசித்திருக்கும் என சிறிலங்காவின் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்திருக்கிறார். எனினும் இங்கிலாந்து அணித்தலைவர் மழை பெய்யாவிட்டாலும் தனது அணி கட்டுப்பாட்டை இழந்துவிடவில்லை எனவும், எமக்கே வெற்றி கிடைத்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இந்திய ஹொக்கி அணி 5 ஆண்டுகளின் பின் பாக். பயணம்

வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான சம்பியன் ஹொக்கித் தொடரில் கலந்து கொள்ளும் இந்திய ஹொக்கியணியில் முக்கியமான வீரர்கள் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒலிம்பிக் பதக்கங்களை வென்றவர்களான தன்ராஜ்புள்ளே, வோக்டிலன் ஆகியோரும் இதில் அடங்கும்.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக ஐந்தாண்டு காலமாக இடை நிறுத்தப்பட்ட ஹொக்கிப் போட்டி மீண்டும் ஆரம்பமாகின்றது. இப்போட்டி நூறு வயதைப் பூர்த்தி செய்யும் சரோக்கானுக்கு அர்ப்பணிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.ஒலிம்பிக் பதக்கம் பெற்றோரில் நீண்ட காலம் உயிர் வாழ்பவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளி.ம.வியின் 12 வயது கடினப்பந்து அணிக்கு சமநிலையில் முடிந்த கன்னிப்போட்டி




கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 12 ஆவது பிரிவு கடினப்பந்து அணியினர் தமது முதலாவது கன்னிப் போட்டியில் யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்கொண்டனர்.

கடந்த 18.09.2004 அன்று யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி/ம.வி. அணி முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அணித்தலைவர் யோ.நிரோசன் 15 ஓட்டங்களையும், வா.சஞ்சீவன் 15 ஓட்டங்களையும், ம.ஜனகன் 14 ஓட்டங்களையும், கி.கிருசாந் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தமது முதல் இன்னிங் சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தினர்.

இதில் கிளி/ம.வி. சார்பாக யோ. நிரோசன், வா.சஞ்சீவன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் ம.ஜனகன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். தனது இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்து கிளி/ ம.வி. அணியினர் 7 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டநேரம் நிறைவடைந்தது. ஏற்கனவே 16 வயதுப்பிரிவு ,14 வயதுப் பிரிவு கடினப்பந்து அணிகளைக் கொண்டுள்ள கிளி/ம.வி. யின் முன்றாவது அணியாக 12 வயதுப் பிரிவு அணி உருவாகியுள்ளது.





## சிந்தனைக்கு

விடுதலைப்புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள்தான் மக்கள்; மக்கள் தான் புலிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

# அரசின் நிலை என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கம் தனது உறுதியான கொள்கையை வெளிப்படுத்துதல் வேண்டியது அவசிய மானதாகும். இதனை அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூடச் சுட்டிக் காட்டியுள்ளார் இதைவிடுத்து அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டுவதோ அன்றி ஏனைய தரப்புக்கள் மீது பழிபோட முற்படுவதோ ஏற்றுக்கொள்ளத்தக்க தல்ல.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகத் தமது உறுதியான நிலைப்பாட்டை ஒன்றிற்குப் பல தடவை கூறிவிட்டனர். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான சமாதானப்பேச்சுவார்த்தைகளை எப்பொழுதும் ஆரம்பிக்கத் தயார் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும். இடைக் காலத்தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுவார்த்தை தவிர வேறு எதுபற்றியும் தற்பொழுது பேசுவதில் பயனில்லை என் பதனைத் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

இதனால் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்துக் குழப்பமான ஒரு நிலைப்பாட்டையோ இழுத்தடிப்பிற்கான செயற்பாட்டையோ கொண்டதாக எவரும் குற்றம்சாட்டுவதற்கில்லை. அத்தோடு விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான நகல் திட்டம் பேசுவதற்கு ஏற்ற தானதொன்று என உலக நாடுகள் பலவற்றால் ஏற்றுக் கொள்ளப் பட்டதுண்டு.

இந்த நிலையில் திட்டவட்டமாகப் 'பந்து' அரசின் கைகளிலேயே உள்ளது. ஆனால், ஆளும்தரப்பு இதனை ஏற்றுக்கொள்ளுவது போன்றோ வெளிப்படுத்துவது போன்றோ பேசுவதாக இல்லை. மாறாக, சமாதானப்பேச்சுவார்த்தை குறித்து முன்னுக்குப் பின் முரணாகவும் குழப்பமாகவுமே அது பேசவிளைகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமென்று கூறி வருகின்றபோதும், ஆளும் கூட்டணிக்குள் இது குறித்துக் கருத்து ஒருமைப்பாடு இல்லை ஆளும் கட்சியின் சமாதானப் பங்காளியான ஜே.வி.பி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சு வார்த்தைக்கு எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றது. ஜே.வி.பியின் இந்நிலைப்பாட்டினை அரசாங்கம் தனக்குச் சாதமாக்கிக் கொள்ளவும் முற்பட்டிருக்கலாம். அன்றி ஜே.வி.பியின் இந் நிலைப்பாடானது அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டைப்போடுவதாகவும் இருக்கலாம். ஆனால் இதில் எதுவாக இருப்பினும்அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இது குறித்த முடிவொன்றிற்கு வருதல் அவசியமானதாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்–ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றபோதே இனப்பிரச்சினை தொடர்பாக இருதரப்பினிடை யேயும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வர முடியவில்லை. தேசிய பிரச் சினை நெருக்கடி ஒன்றிற்கு இணக்கப்பாடு காணாமலே இரு கட்சிகளும் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஆட்சியும் அமைத்தன.

ஆனால் ஆட்சி அமைத்த பின்னர் கூட இவர்கள் இனப்பிரச் சினை தொடர்பான இணக்கப்பாடு ஒன்றிற்கு வராது ஆட்சி நடத்த முற்படுவதானது இவ்விரு தரப்பும் ஆட்சியதிகாரத்தில் கொண்டுள்ள அக்கறையை நாடு எதிர்நோக்கும் பிரச்சினையில் கொண்டிருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஒருபுறத்தில் இவ்விரு தரப்பும் இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டுமே இணக்கப்பாட்டிற்கு வரமுடியவில்லை என்பதையே செயற் படுத்திவரினும் இவர்களின் இத்தகைய தெளிவற்ற நிலையே நாட்டின் இன்றைய அனைத்து நெருக்கடிகளுக்கும் காரண மாகியுள்ளது. குறிப்பாக நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக் கடிகளைத்தீர்த்து வைக்கக் கூடிய வழிவகைகளுக்கு இது பெரும் முட்டுக்கட்டையாகியுள்ளது.

இந்நிலையில் ஆளும் கூட்டணிக்குள் இனப்பிரச்சினை தொடர் பாக முரண்பாடு நீக்கப்படாத வகையில் நாட்டின் ஏனைய பிரச்சி னைகளுக்கும், தீர்வுகளைக் காண்பது கடினமானதாகவே இருக் கும். ஆகையினால் சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்விற் காக மட்டுமல்ல நாடு எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளின் தீர்விற்காகவேனும் இனப்பிரச்சினை தொடர்பான உறுதியான நிலைப்பாடு ஒன்றிற்கு வருதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது ஜே.வி.பி.யினரின் நிலைப்பாட்டை காரணமாகக் காட்டிக்கொண்டு சமாதான முயற்சிகளில் சனாதிபதி சந்திரிகா பின்னிற்பாரேயானால் இனப்பிரச்சினை விவகாரத்தில் சனாதிபதியின் நிலைப்பாடும் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு மாறானதாக உள்ளதென்ற முடிவிற்கே வரவேண்டியதாக இருக்கும். அவ்வாறு இல்லாது சமாதானப்பேச்சுவார்த்தைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பின் ஜே.பி.பி யினரைப் புறந்தள்ளி சமாதான முயற்சிகளுக்குப்புத்துயிர் ஊட்ட வேண்டும்.இதற்கு ஆதரவளிக்கக் கூடிய சக்திகள் வெளியில் உள்ளன.

# அரச ஊழியர் கோரும் சம்பள உயர்வை வழங்க

# மேலதிகமாக 9000 கோடி ரூபா தேவை

## -உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் கோரும் சம்பள அதிகரிப்பை வழங்குவ தற்கு மேலதிகமாக 9000 கோடி ரூபாய் தேவைப்படுகிறதென உள் நாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. பதவிக்கு வந்த ஒவ்வொரு அர சாங்கமும் தொழிற்சங்கக் கோரிக் கைகளுக்கு தலைவணங்கியதால் இந்த நிலை தற்போதைய அர சுக்கு ஏற்பட்டுள்ளதென அவ் அமைச்சு மேலும் அறிவித்துள் ளது. மேலும் திஸ்ஸதேவேந்திர ஆணைக்குழு அறிக்கை வெளி வந்தவுடன் ரூபாய் 600இற்கு மேல் சம்பளம் அதிகரிக்கப்படமாட்ட தென அமைச்சர் தொடங்கொட அறிவித்துள்ளார்.

# சட்டவிரோத வானொலி ஒலிபரப்பு நடத்திய இருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோத வானொலி ஒலி பரப்புச் சாதனங்களை வைத் திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு இருவர் கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தமிழரொருவரும், கேரள மாநிலத்தைச் சேர்ந்த இந்தியர் ஒரு வருமே கைது செய்யப்பட் டுள்ளனர்.

சக்தி வாய்ந்த கருவி மூலம் வானொலி ஒலிபரப்பை இவர்கள் நடாத்திக் கொண்டிருந்தபோதே கைதானதாகவும், ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான கருவியும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக் கும் பொலிசார்

குறித்த நபர்கள் இருவரும் தற் போது நீதிமன்ற விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள் ளனர்.

# சேனையூர் அச்சுதனின் கவிதை நூல் வெளியீடு

(திருமலையில்)

சேனையூர் அ.அச்சுதனின் "விடிகாலைக் கனவுகள்" கவிதை நூல் வெளியீட்டுவிழா செப்ரெம் பர் 28 ஆம் திகதி காலை மூதூர் கிழக்கு சேனையூர் மத்திய கல் லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக விடு தலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் சி.எழிலன், திருகோணமலை மாவட்டத் தமிழீழ காவல்துறை மேலாளர் கா.சிரஞ்சீவீ ஆகி யோர் பங்கு பற்றுவர்.சிறப்பு விருந் தினர்களாக உதவிக்கல்விப் பணிப் பாளர் செ.விபுணசேகரம், கட்டை பறிச்சான் விபுலானந்த வித்தியாலய அதிபர் இ.முத்துராஜா சேனையூர் மத்திய கல்லூரி அதிபர் இரா. இரத்தினசிங்கம், சந்தோஷபுரம் சிவசக்தி வித்தியாலய அதிபர் வி.நவரத்தினராசா, திருமலை கலைபண்பாட்டுக்கழகத் தலைவர் கலாபூஷணம் கா.வீரசிங்கம், ஆசி ரியர் எம்.வதனரூபன் தலைமை கணேசா கலாமன்றத் தலைவர். நா.வாமனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (25)

# மனித எலும்புக்கூட்டுப்பாகங்கள் அலுத்கம பகுதியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மனித எலும்புக் கூட்டின் பாகங் கள் சிறிலங்காவின் அலுத்கம பகு தியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சென்ற புதன் அலுத்கமவில் உல்லாச விடுதியொன்றில் கட்டு மானத் தொழிலாளர்கள் நிலத்தைத் தோண்டிய போதே இம்மனித எலும்புக்கூட்டுப் பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற களுத்துறை நீதவான் எலும் புக்கூட்டுப் பாகங்களை நீதிமன்ற மருத்துவப் பணிப்பாளருக்கு அனுப்புமாறு பொலிசாருக்கு உத் தரவிட்டுள்ளார்.

தமது விடுதி வளாகத்தில் கட்டு மானப் பணிக்காக நிலத்தைத் தோண்டிய போது மனித எலும்புக் கூட்டுப் பாகங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாக குறித்த விடுதி இணைப்பு உத்தியோகத்தர் கொடுத்த முறைப் பாட்டின் பிரகாரம் அலுத்கம பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# பரிசுப்பெருநாள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்ததின் வரு டாந்த பரிசுப் பெருநாள் விழா இன்று காலை 10.30 மணிக்கு நடை பெறும். வித்தியாலய அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளை தலைமை யில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா அவர்கள் கலந்து கொள்கிறார்.

# உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு நாளை தமிழ்மொழித்திறன் எழுத்துத் தேர்வு

கல்வி மேம்பாட்டுப்பேர வையினரால் உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழ்மொழிமூல ஆசிரியர்களிடையே ஆண்டு தோறும் நடத்தப்பட்டுவரும் தமிழ் மொழித்திறன் எழுத்துத் தேர்வு நாளை பகல் 1.30 மணிக்கு நாடு தழுவிய அளவில் நடைபெற இருக்கிறது. மூன்று மணிநேரம் நடைபெறும் இப் போட்டித் தேர்வு வன்னியில் 1 மணிக்கு நடைபெற இருக்கிறது மேற்படி தேர்வுக்கு விண்ணப் பிக்காதவர்களும் விரும்பின் தேர்வு நடைபெறும் தேர்வு மேற்பார்வை யாளர்களிடம் தமது பெயரைப் பதிவு செய்து தேர்விலே தோற்ற முடியும். வடபகுதியில் தேர்வு நடைபெறும் நிலையங்கள் பின் வரும் இடங்களில் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளதாக கல்வி மேம் பாட்டுப் பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

*கிளிநொச்சி*- வலயக்கல்விப் பணிமனை, பூநகரி ம.வி., தருமபுரம், ம.வி.

*முல்லைத்தீவு*-புதுக்குடியிருப்பு ம.வி, முல்லைத்தீவு ம.வி.

*துணுக்காய*-மல்லாவி மத்திய கல்லூரி.

*வவுனியா வடக்கு*- கனகராயன் குளம் ம.வி. புதுக்குளம் ம.வி.

*வவுனியா தெற்கு*-வவுனியா தமிழ் ம.வி.

*யாழ்ப்பாணம்* - வேம்படி மகளிர் கல்லூரி.

*வலிகாமம்* - இராமநாதன் மகளிர் கல்லூரி.

*தீவகம* - வேலணை வைத்திய லிங்கம் துரைச்சாமி ம.ம.வி

*தென்மராட்சி* - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

*வடமராட்சி*- மருதங்கேணி இந்து ம.வி, புலோலி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்.

*மடு*-ஆண்டாங்குளம் ம.வி, பெரிய பண்டிவிரிச்சான் ம.வி,

*மன்னார*-சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.

# இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட மாட்டாது

## –ஆறு அதிகாரிகள் ஓய்வு பெறுவர்

இராணுவ சிரேஷ்ட அதி காரிகளுக்கு மூன்றாவது தட வைக்கான சேவை நீடிப்பு வழங் கப்படாதென அரசாங்கம் தீர்மா னித்ததைஅடுத்து அடுத்த வருட முற்பகுதியில் ஆறு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெறவுள்ளனர். இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவுக்கு அடுத்த நிலையிலுள்ள ஆறு அதிகாரிகளே இவ்வாறு ஓய்வு பெறவுள்ளனர். மேஜர் சூல செனவிரட்ன, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்சி, மற்றும் மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய ஆகியோரே இந்த ஆறு பேருமாவார். (32)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் இலஞ்ச ஆணைக்குழுவால் கைது

பொலிஸ் திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் செனவிரட்ன பண்டா நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப் பட்டார். பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவரை நீதவான் ஐயாயிரம் ரூபா ரொக்க பிணையிலும், ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையிலும் செல்ல அனுமதித்தார். அதேநேரம் அவர் வெளிநாட்டுக்குச் செல்ல முடியாத வகையில் கடவுச்சீட்டை முடக்கி வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார். இவர் தமது சொத்துக்கள் தொடர்பில் உரிய ஆவணங் களை சமர்ப்பிக்க முடியாமல் போனமையே கைது செய்யப்பட்டமைக்கான காரணம் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (32)

# தேர்தலில் அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் மீது ஒக்ரோபர் 7இல் வாக்கெடுப்பு

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளை பயன்படுத்தும் தொடர்பிலான விவாதம் எதிர்வரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது அன்றைய தினமே வாக்கெடுப்பும் இடம்பெறவுள்ளது.

இந்த விவாதமும் வாக்கெடுப்பும் நேற்று நடைபெறவிருந்த போதும் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய இந்த சட்டமூலத்தை விரைவாக அமுல் செய்வதன் காரணமாக பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்தார்.

எனவே இந்த சட்டமூலத்தை அமுல் செய்வதை காலதாமதப் படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான வி. புத்திரசிகாமணி இதன் போது உரையாற்றுகையில் குறிப்பிட்ட சட்டமூலத்தை விரைவில் அமுல் செய்வதால் பெருமளவில் அடையாள அட்டைகள் இன்றி இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் எனக் குறிப்பிட்டார்.

எனினும் அரசாங்கத் தரப்பில் இதற்கு மாறான கருத்து வெளியிடப்பட்டது

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவது ஒன்றரை வருட காலத்திற்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகவும் எனினும் நேற்று அது தொடர்பில் விவாதத்தை நடத்துவதற்குநேற்று முன்தினம் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் பிரச்சினை ஏற்படவே அவசரமாக கட்சித்தலைவர்களின் கூட்டம் கூட்டப்பட்டது

அதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானப்படி தேர்தல் வாக்களிப்பில் அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பான பாராளுமன்ற விவாதம் அக்டோபர் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது

அதேநேரம் அன்றைய தினம் குறிப்பிட்ட விவாதம் தொடர்பில் வாக்கெடுப்பை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் முடிவெடுத்தனர்

இதேவேளை இச் சட்டமூலம் தொடர்பாக இ.தொ.க திருத்தமொன்றைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்த்த போது அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அத்துடன் இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# கனகரத்தினம் ம.ம.வி. பவளவிழா நடைபவனி

(யாழ்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழாவினை முன்னிட்டு பவளவிழா நடைபவனி நேற்றுக் காலை மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

காலை எட்டுமணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் மங்கல விளக்கினை துணைவேந்தர் சு.மோகனதாஸ் அவர்களும் பாடசாலை பழையமாணவர் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அவர்களும்பழைய மாணவர் சங்கச் செயலாளர் மன்மதராஜலிங்கம் அவர்களும் ஏற்றிவைக்க பாடசாலைக் கொடியினை அதிபர் ஏற்றி வைத்தார். அதனைத்தொடர்ந்து பாடசாலை ஸ்தாபகர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களின் உருவச்சிலைக்கு துணைவேந்தர் மலர் மாலை அணிவித்து நடைபவனியினை ஆரம்பித்து வைத்தார்.

இந்நடைபவனியினை பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகி ஸ்ரான்லி விதி,கண்டிவீதி, கச்சேரி நல்லூர்வீதி வழியாக ஆசீர்வாதப்பர் வீதியினை அடைந்து அங்கிருந்து கனகரத்தினம் வீதிவழியாக மாம்பழச்சந்தியினை அடைந்து பின்னர் அரியாலை சித்தி விநாயக்ர் ஆலயம் சென்று மீண்டும் கண்டி வீதிவழியாக சின்னக் கிணற்றடி வீதியினை அடைந்து நாவலர் வீதி ஊடாகப் பாடசாலையினை வந்தடைந்தது.

நடைபவனி சென்ற இடங்களில் எல்லாம் அவ்வூர் மக்கள் பூரண கும்பம் வைத்து கனகரத்தினத்தின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் நடைபவனியில் கலந்து கொண்டோரை வாழ்த்தினர்.



# பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகளிடம் ஆயுதங்களைக் கோரமாட்டாராம் சந்திரிகா!

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறைமையைப் பாதுகாக்கும் வகையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அமெரிக்காவில் கூறியுள்ளார்.

அமெரிக்காவில்நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு, மோதல் தவிர்ப்பு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இலங்கையின் அனுபவங்கள் என்ற தொனிப் பொருளில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை அங்கு அவர் மேலும்உரையாற்றுகையில்; இனப்பிரச்சினைக்கு அதிகார பகிர்வு மூலமே தீர்வு காணமுடியும் இலங்கையின் இனப்பிரச் சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே நிரந்தரத் தீர்வுக்காண அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சிக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கு முன்னராக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டுமெனத்எமது அரசு வலியுறுத்தாது.

இலங்கையில் மீண்டுமொரு போரை எதிர்கொள்ளும் நிலைக்குத் திரும்பிவிடாமலிருக்கத் தேவையான அனைத்தையும் செய்யப்படும். இலங்கையின் தற்போதுள்ள அதிகாரப் பரவலாக்கலற்ற ஒற்றை ஆட்சிமுறைக்கு மாற்று வழிகளைக் காண்பதிலேயே இலங்கையின் இன மோதலுக்கான தீர்வு உள்ளதுஎனக் கூறினார்.

# அடுத்த பொலிஸ் மா அதிபராக சந்திரா பர்னாண்டோ

சிறிலங்காவின் அடுத்த பொலிஸ் அதிபராக சிரேஷ்டபொலிஸ் அதிகாரி சந்திரா பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பரிந்துரையை சனாதிபதி அரசியல் அமைப்புச் சபைக்கு செய்துள்ளார். தற்போதைய காவல்துறை மா. அதிபர் இந்திராடிசில்வா இந்த மாதம் 30 ஆம் திகதியுடன் தமது பதவியில் இருந்து ஓய்வு பெற வுள்ளார்.

அவரின் காலம் நீடிக்கப்படாது என்ற அடிப்படையிலேயே இந்தப் பரிந்துரையை சனாதிபதி தமக்கு அனுப்பியுள்ளதாக அரசியலமைப்பு சபையின் உறுப்பினர் தம்மிக்க கித்-துலேகொட தெரிவித்தார். எனினும் அரசியலமைப்பு சபை இன்னும் தமது ஒப்புதலை சனாதிபதிக்கு அனுப்பவில்லை. இதேவேளை இலங்கையின் பொலிஸ் பிரிவில் காமினிரன்தெனிய அடுத்து வரும் சிரேஷ்ட நிலையில் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# மின்சாரம் தடைப்படும்

(அலவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் கிழக்குப்புறமாக நாளை உயர்மின் அழுத்த இறுதிக்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பெறவுள்ளது.

இதன் காரணமாக அப்பகுதியில் அன்றைய தினம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

(சோ)

# கைத்துப்பாக்கியுடன் இளைஞர் கைது

கொழும்பு பம்பலப்பிட்டியில் இளைஞர் ஒருவர் கைத்துப்பாக்கியுடனும் ,அதற்குப் பயன்படுத்தும் ரவைகளுடனும் நேற்றுக் கைது செய்யப் பட்டுள்ளதாக பம்பலப்பிட்டிப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின்போதே இவர் கைதானதாகவும் அவரிடம் இருந்து உந்துருளியும் தடுத்துவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சர்வதேச...

என்ற வகையில் தமிழ் மக்கள் நிலையான சமாதானத்தை வேண்டி நிற்பதுடன், உலகெங்கிலும் உள்ள சமாதானத்தை விரும்புவோருடனும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டோருடனும் சேர்ந்து சமாதான தினத்தை அர்த்தமுள்ளதாக்க விழைந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் இறைமையும், கௌரவத்துடனும் சுதந்திரத்துடனுமான சமாதானமும் இத்தீவை 1505 இல் அந்நியர்கள் ஆக்கிரமித்தபோது பறிக்கப்பட்டன. இறுதியாக, 1948 இல் பிரித்தானியர் இந்தத் தீவை விட்டுச் சென்ற போது தமிழ் மக்கள் கண்டதெல்லாம் சுதந்திரமென்ற பெயரில் மீண்டும் அடக்கியாளப்படும் ஓர் கூட்டுக் கலவை அரசமைப்பையே. எண்ணிக்கையில் சிறுபான்மையினரென அடையாளமிடப்பட்டு மேலாண்மைச் சிந்தனையும் பேரினவாதப் போக்கும் கொண்ட ஓர் அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அர்த்தமற்றதாக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டனர். பாரபட்சமான சட்டமூலங்களால் தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டனர்.

சனநாயக, வன்முறையற்ற பாராளுமன்ற வழிகள் எல்லாம் மூடப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் இலங்கை அரச முறைமையிலிருந்து பிரிந்து செல்வதற்கென 1977 இல் நடந்த தேர்தலில் ஆணை வழங்கினர். சுதந்திரத்திற்கும் சமாதானத்திற்குமான தமிழ் மக்களின் இந்த வேட்கையை இலங்கை அரசுகள் இராணுவ வல்லாதிக்கத்தால் அடக்க முயன்றன. தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டவும் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர். தொடர்ச்சியான அரச இராணுவ நடவடிக்கைகள் ஓர் முழு அளவிலான யுத்தமாகப் பரிணமித்த வகையில் தமிழ் மக்கள் இனப் படுகொலை, இடப்பெயர்வு, அடிப்படைக் கட்டுமானங்களின் அழிவு என முற்றான வாழ்வியலையே இழந்தார்கள். விடுதலைப் போராட்டத்தில் 17,000 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் உயிர்த் தியாகம் செய்ததுடன் ஒரு இலட்சம் அளவிலான பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் கடந்த காலங்களில் எய்தப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட பின்னணியிலும் கூட, பொறுப்புணர்வுள்ள விடுதலை இயக்கம் என்ற வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைமைப் பீடம் காலத்திற்குக் காலம் சாத்தியமான மாற்றீடுகளைப் பரிசீலிப்பதில் தாங்கள் ஆர்வமுடன் இருப்பதை வெளிக்காட்டி வந்துள்ளது. இந்தவகையில், விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை 2002 இல் பதவியில் இருந்த அரசு மதித்து, நிரந்தர யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றையும் செய்தது. இதன் விளைவாக ஆறு சுற்று அரசியல் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இறுதித் தீர்வொன்றை எட்டுவதற்கு வெகு காலம் செல்லும் என்பதை உணர்ந்து இரு தரப்பினரும் ஓர் இடைக்கால ஒழுங்கு தொடர்பாக இணக்கம் கண்டனர். இந்த வகையில் அரசு சமர்ப்பித்த யோசனைகள் யாவுமே காலத்தின் தேவைகளை நிறைவேற்றப் போதுமானவையாக இல்லாதிருந்ததால் தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபைச் சமர்ப்பித்து அதன் அடிப்படையில், இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க ஆயத்தமாக இருப்பதையும் தெரிவித்தனர். இந்த நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் 2004 இல் நடந்த பொதுத் தேர்தலில் உறுதி செய்து வடக்குக் கிழக்கிற்கான 22 பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் பரிபூரண ஆதரவுடன் வாக்களித்து உறுதியான ஆணையின் மீது தெரிவு செய்துள்ளனர்.

புதிய கூட்டரசு ஒன்று பதவி ஏற்றதைத் தொடர்ந்து சமாதான நடவடிக்கை முடக்கநிலை அடைந்துள்ளதுடன் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றும் பணியும் தேக்கமடைந்துள்ளது. தமிழ் மக்களும் அவர்களது தலைமையும் இன்று நெகிழ்ச்சித் தன்மை இல்லாதவர்களென்றும் தீர்மானம் எடுக்கத் தயங்குபவர்கள் என்றும் அநீதியாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. பிரிவினையை அடிப்படையாக வைத்து ஓர் விடுதலைப் போராட்டத்தை நடத்திய தமிழ்த் தலைமை சாத்தியமான மாற்று வழிகளை ஆராய்வதற்கெனப் பேச்சுவார்த்தை முயற்சிக்குள் பிரவேசித்து நிற்கின்றது. இதுவே நெகிழ்வுத் தன்மை. இதுவே சமாதானத்திற்கான வேணவா.

அடக்குமுறையும், அடிப்படை மனித உரிமை மறுப்புமற்ற கௌரவத்துடனான சமாதானத்தை உலகில் நிலைத்து நிற்க வேண்டிய சகல முயற்சிகளையும் செய்வதற்கு, தங்களுக்குச் சமாதானத்தை வேண்டிநிற்கும் தமிழ் மக்கள் ஐ.நா.வுடனும் ஏனைய சமாதானத்தை நேசிக்கும் மனிதகுலத்துடனும் இணைந்து உழைக்கக் கரம்கோர்த்து நிற்கிறார்கள்.

## விடுதலைப்....

வில் மனித உரிமைகள் ஆனைக்குழுவினருடனான சந்திப்பின்போது வடக்கு கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகத்தில் தலைவர் வணபிதா கருணாரட்ணம் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளார்

## மட்டு...

வார்த்தைகளையடுத்து இந்தச் சந்திப்புக்களை தொடர இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் திகதியும் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இரண்டு தடவைகள் அவை ஒத்தி வைக்கப்பட்டன. எனினும் தற்போது இந்தச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுக் கொண்டதனையடுத்து இன்று இந்தச் சந்திப்பு வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கின்றது. இதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் உறுதிப்படுத்தியுள்ளார். (32)

## திருமலையில்...

அவ்வாறு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எமது முகாம்களைப் பின்நோக்கி நகர்த்தும்படி இலங்கை அரசபடையினர் கோருவது வேடிக்கையாக உள்ளது.

பின்நோக்கி நகர்த்தும்படியான வேண்டுகோள் இலங்கைக் கடற்படையின் சுயமான முடிவு அல்ல. அண்மையில் இலங்கை வந்த இந்தியக் கடற்படைத்தளபதி அருண்பிரகாசின் இரகசிய ஆலோசனையின் பேரில்தான் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் வெளிநாடுகளிலிருந்து வந்த படை அதிகாரிகளும் இவ்வாறான ஆலோசனைகளை சிறிலங்காப் படையினருக்குவழங்கியும், அதனை ஏற்று இலங்கைப் படையினர் அறிக்கைகள் வெளியிட்டதும் புதிதல்ல.

எமது முகாம்கள் கரையோர காவலரண்களைத் தாண்டி எல்லை மீறி அமைக்கப்பட்டவை அல்ல. எமது மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும், ஏனைய செயற்பாடுகளுக்கும் எமது முகாம்கள் தடையாக இருப்பின் அது தொடர்பாக நாம் சிந்திப்போம். உதாரணமாக குரங்கு பாஞ்சான் முகாம் சற்று பின்நோக்கி நகர்த்தப்பட்டு முஸ்லிம் விவசாயிகள் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் வீடுகள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களை நடுத்தெருவில் தவிக்கவிட்டுள்ள சிறிலங்காப்படையினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள எமது முகாம்களை அகற்றுமாறும், பின்நோக்கி நகர்த்துமாறும் கோருவதில் என்ன நியாயம் இருக்கிறது? "என்று எழிலன் தனது பேச்சில் கேள்வி எழுப்பினார். (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.